# செந்தமிழ்ச் செல்வி



## உள்ளுறை


| | |
|---|---|
| கழகத் தலைவர் ... அறிக்கை | ௩௬௩ |
| நான் கண்ட புலவர் பெருமக்கள் | ௩௬௭ |
| இன்தமிழ்த் தாய் | ௩௭௬ |
| பத்துப்பாட்டிற் பறவைகள் | ௩௭௭ |
| பத்துப்பாட்டும் வானநூலும் | ௩௮௨ |
| திருவரங்கத்தந்தாதி | ௩௮௫ |
| பயனில் மூப்பு | ௩௯௧ |
| நாற்கவிராயர், நல்லசிவன் பிள்ளை அவர்கள் | ௩௯௭ |
| மதிப்புரை | ௪00 |
| செய்திகளும் குறிப்புக்களும் | ௪0௧ |


சிலம்பு ௨௬ | வள்ளுவர் ஆண்டு ௧௯௮௩ பங்குனி, (April 1952) | பரல் ௮

# ‘செந்தமிழ்ச் செல்வி’

## இதழாசிரியர் கூட்டுத்து உறுப்பினர்கள்

க. திரு. மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி.

உ. ,, ‘சித்தாந்த கலாநிதி’ வித்துவான், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள், தலைமைத் தமிழ்விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

ங. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள், கோயமுத்தூர்.

ச. ,, தி. சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஏ., வழக்குரைஞர், சாத்தூர்.

ரு. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள், B.O.L. (Hons.) M.E.S., அரசினர் கல்லூரி, கோயமுத்தூர்.

சு. ,, வித்துவான், பண்டித, கா பொ. இரத்தினம் அவர்கள், பி. ஏ. (ஆனாஸ்) பி. ஓ. எல். அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

எ. ,, ‘சித்தாந்த பண்டிதர்’ ப. இராமநாத பிள்ளை அவர்கள், கழகப்புலமையாளர்.

---

# பத்துப்பாட்டுச் சொற்பொழிவுகள்

9, 10-2-52-ல *திருநெல்வேலிநகர்க்கண் நடைபெற்ற பத்துப்பாட்டு மாநாட்டில நிகழ்த்தப்பெற்ற* டாக்டர், மு. வரதராசனுர் *அவர்களின் தலைமையுரையும்*, திரு. ஔவை, துரைசாமிப்பிள்ளை (*திருமுருகாற்றுப்படை*) திரு. வி. சிவக் கொழுந்து (*பொருநராற்றுப்படை*), திரு. கா. மாயாண்டிபாரதி (*சிறுபாணாற்றுப்படை*), திரு. மு. ரா. கந்தசாமிக் கவிராயர் (*பெரும்பாணாற்றுப்படை*), திரு. ச. குருசந்தோணி (*முல்லைப் பாட்டு*), திரு. ஆ. ஜெயரத்தினம் (*மதுரைக்காஞ்சி*), திரு. அ. க. நவநீதகிருட்டிணன் (*நெடுநல்வாடை*), திரு. க. வெள்ளை வாரணன் (*குறிஞ்சிப்பாட்டு*), திரு. ஆ. அருளப்பன் (*பட்டினப் பாலை*), திரு. ந. சேதுரகுநாதன் (*மலைபடுகடாம்*) *முதலிய புலவர் பெருமக்களின் அரிய சொற்பொழிவுகளும் இதன்கண் உள. இது, பத்துப்பாட்டைக் கற்றும் அவாவைமுறுகச்செய்து, கற்பார்க்கு உறுதுணையாய் நிற்றும் என்பது வெளிப்படை.*

அழகிய இருவண்ண மேலட்டையுடன் விலை ரு. 4 8 0



பாகனேரித் தமிழ்ப்புரவலர்

வே. பெரி. பழ. மு. காசிவிசுவநாதன் செட்டியார்

# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௨௯ | திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௩, பங்குனி ஏப்ரல் 1952 | பரல் ௮


கழகத் தலைவர்

## *திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார் அவர்கள் படித்தளித்த அறிக்கை

அன்பார்ந்த உறுப்பினர்காள்! சைவமும் தமிழும் வளர்க்க ஒத்துழைக்கும் உடன்பிறப்பாளர்காள்!!

நந்தமிழ்நாடு செய்த தவப்பயனாகத் தோன்றியது இக் கழகம். நாட்டுமக்களின் நல்லறிவு, ஒழுக்கம், நாகரிகம் முதலியன வளர்ச்சியடைவது அந்நாட்டு மக்களின் தாய்மொழி மாசு மறுவின்றிப் பிறநாட்டறிஞரும் விழைதரு முறையில் செம்மை பெற்றுத் திகழ்வதினாலாம். மொழி செம்மைப்படுமேல் அம் மொழிப்பொருளாகும் இறைவன் நினைவும் வழிபாடும் சிறக்கும். இங்ஙனம் தாய்மொழியும் சிவநெறியும் தழைத்தோங்கத் தம் வாழ்நாள் முழுவதையும் இரவு பகல் இடையீடின்றி உழைக்கத் தக்கார் ஒருவர் வேண்டப்பெறும். இத்தகைய பெருந்தகைமையர் நம் வ. திருவரங்கம் பிள்ளை யாவர். இவர்கள் 1921-ல் இக் கழகத்தை நிறுவும் வகையில், தமக்கு உறுதுணையாக ஏரம்மாள் புரம் திருவாளர். மா. திரவியம் பிள்ளை அவர்களைப் பெற்றுப் பங்குகள் தொகுத்து வரலானார்கள் ஆண்டு வளரவளரப் பங்குகளும் பலவாகப் பெருகின. 1929 முதல் தமிழ்மொழியைத் தூய முறையில் வளர்க்க நிறுவப்பெற்ற தென்னிந்திய தமிழ்ச் சங்கமும் கழக அறநிலையங்களில் ஒன்றாக இணைக்கப்பட்டது. இணைப்புநாள் முதல் தமிழ்மொழி வளர்ச்சி கருதித் தனித் தமிழ்த்தேர்வுகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வந்தன.

*தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் 32-ம் ஆண்டுப் பங்காளிகள் பொதுக்கூட்டம்

தேர்ச்சியுற்றவர்கட்குத் தேர்ச்சி இதழ்களும் பரிசுகளும் வழங்கப்பெறலாயின.

சைவசமய வளர்ச்சி கருதிச் சமய பாடங்களிலும், திருக்குறளிலும் ஆங்காங்குத் தேர்வுகள் நடத்தப்பட்டுத் தேர்ந்தவர்கட்குத் தகுதித்தாள்களும் பரிசுகளும் வழங்கப்பட்டுள்ளன.

ஆண்டுதோறும், மாநாடுகளும் தக்க பெரியார் தலைமையில் ஆன்றமைந்த கேள்வி அறிவுடையார் விரிவுரையுடன், சிறப்பாய் நடந்துவந்தன. அவ்வக்கால நிகழ்ச்சியிற் கலந்து மகிழ்ந்த அன்பர்கள் யாவரும் ஆண்டுவிழா எப்பொழுது? பெருஞ்சொல் விருந்து எப்பொழுது கிடைக்கும்? என்றே எதிர்பார்த்திருப்பர். விரிவுரையாளர்களும் தத்தம் பொருளைச் செம்மையுற விரித்தளித்த வள்ளல்களாகவே விளங்கினார்கள். இங்ஙனம் நாட்டிலுள்ள தமிழ்மக்களின் ஆர்வத்தைப் பெருக்கி அறிவும் அன்பும் அருளும் உடையவர்களாகச் செய்யும் வகையில் நம் மதியிதழாகிய செந்தமிழ்ச்செல்வியும் தொடர்ந்து தொண்டு புரிவதாயிற்று.

நாட்டில் வீணே பலிகவர் தெய்வங்கட்கு வாயிலாச் சிற்றுயிர்களைப் பலிகொடுத்து மருளையும் மறத்தையும் பெருக்கி வந்த மக்கள் மனப்பாங்கை மாற்றத் திருநெறித் தொண்டர் கழகமும் அமைக்கப்பட்டது. அதன் வழியாக ஊர்கள்தோறும், கிராமங்கள்தோறும் கூட்டங்கூட்டமாகத் தொண்டர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், செல்வச் சீரியர்கள் சென்று சொற்பொழிவாற்றி உயிர்க்கொலை செய்யாது தடுத்துவந்தனர். இக்கழக அமைப்பின் சிறப்புப் பயனாகவே, என்றும் நம் முன்னோர் எவரும் கேட்டிராத, கேட்கமுடியாத, எருமைக்கடாப் பலிவிலக்கு ஏற்பட்டதென்க. பாளையங்கோட்டையில் ஒரு நூற்றாண்டுக் காலமாகப் பன்னிரண்டு யாண்டுகட்கு ஒருமுறை எருமைக் கடாப் பலி ஏற்று வந்ததாகச் சொல்லப் பெறும் ஆயிரத்தம்மன் கோயில் கொடையைத் தடுத்து நிறுத்தவேண்டுமென்ற முயற்சியில் இடைவிடாது உழைத்து உற்றாரும் பெற்றாரும் வேண்டா முயற்சியை நிறுத்துக என்று இடித்துரைத்தும் கேளாது அடுத்து முயன்று வெற்றிபெற்றவர் நம் அரங்கனாரே. கொல்லாமை அறத்தைக் குறிக்கோளாகக் கொண்ட சமணர் குழு நண்பர் பால், முருகன் அருள்கொண்டு மூரிநீர் வைப்பெங்கும் முருகன் திருப்புகழ் எடுத்துரைக்கும் கிருபானந்தவாரி, உயிர்க்கூறு விலக்குக்காப்புச் சங்க உறுப்பினர்களும், இசைவாணர்களும், ஆசிரியர்களும் செய்த இப்பலி விலக்கு முயற்சியைப் பாளையங்கோட்டையார் மட்டுமா? பாண்டிநாட்டார் மட்டுமா?

தமிழ்நாடு முழுமையும், ஏன் நம் குமரிக்கண்டம் முழுமையுமே அறிந்து அளவிலா இன்பம் அடைந்தது. இதன் பயனாக அன்றோ, இன்று அமைக்கப்பட்ட பயிலிவிலக்குச் சட்டமும் ஆம்.

தம் வாழ்க்கைத் துணைவியா யமைந்த தூய தமிழ்ச்செல்வி திரு. நீலாம்பிகை அம்மையாரும் அவர்தம் தந்தை அண்மையில் மறைந்த மறைமலையடிகளாரும் தம்மை அடிக்கடி தூண்டி ஊக்கி வந்த ஒருமைப் பண்பால் பைந்தமிழ்மொழியைத் தமிழ் நூல்கள் வெளியீட்டிலும் ஆராய்ச்சிக் கட்டுரை, வரலாறு, அறிவியல் நூல்கள் முதலியவற்றிலும் இயன்ற அளவு தூய தமிழ் மொழியையே வழங்க முயன்றுவந்தனர்.

பங்கு ஒன்றுக்கு ரூபா பத்துவீதம் ஐயாயிரம் பங்குகளுடன் ஆரம்பிக்கப்பட்ட இக் கழகம் இன்று தத்தம் பங்குத் தொகையை இரட்டிப்பாம் நிலையில் முதலும் இலக்கமாகும்படி நாமெலாம் கண்டு களிக்கும்படியான நிலைக்கும் முதல் காரணம் ஆனவரும் அவரே.

இன்ன பண்பும், அன்பும், நண்பும், வாய்ந்த நம் அரங்கனாரை இற்றைக்கு இரு நான்காண்டுகட்கு முன் இழக்க நேர்ந்த நமக்கு ஏற்பட்ட துன்பத்தையும் துயரத்தையும் துடைக்கத் தக்க தகுதிவாய்ந்த உடன்பிறப்பாளர் அவ ருடன்பிறப்பாளராகிய நம் சுப்பையா பிள்ளையவர்களே. தமையனார் ஆணைவழி ஒழுகி, அவர்தம் பணிகளையெல்லாம் அணிபெற ஆற்றுவிக்கும் ஆற்றல் படைத்த நம் ஆட்சிப் பொறுப்பாளர் சுப்பையா பிள்ளையவர்கள், தம் தமையனாரும் இக்கழக நிறைவேற்றற் கூட்டத்தாரும் எடுத்த பணியைத் தொடுத்து முடிக்கும் முயற்சி சிறந்தே விளங்குகின்றார்கள். இதுவரை இக் கழகத்தில் ஏற்பட்டுள்ள முத்தலைவர்களின் மனநிலை முற்றும் உணர்ந்து திருந்திய முறையைக் கைக்கொண்டு வெற்றிபெற்றுச் சிறக்கும் நம் ஆட்சிப் பொறுப்பாளர் திறத்தில் நம் முழு நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.

இவர்கள் நெல்லையிலும் சென்னையிலும் மாறிமாறித் தங்கி வேலை வாங்கிவரும் முறையில் கழக வெளியீடாக நூல்கள் அறுநூறுக்குமேல் வெளியிட்டும் செந்தமிழ்ச்செல்வியைச் சீரிய முறையில் நாரியரும் விழைதரு நிலையில் வெளிப்படுத்தியும், எட்டுத்தொகை மாநாட்டில் ஐந்து மாநாடுகள் கூட்டியும், அண்மையில் கழகந்தோன்றிய நெல்லையில் பத்துப்பாட்டு மாநாட்டையும் சிறப்புற நடத்தித் தமிழ்விருந்து அளித்துள்ளார்கள்.

தென்னிந்திய தமிழ்ச்சங்கச் சார்பில் புதுமுறையில் சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் (புலவர்) பட்டத் தேர்வுப்

பயிற்சிக் கல்லூரிகளில் பயின்றுவரும் முந்நிலைத் தேர்வு எழுதும் மாணவர்களின் பயிற்சியை ஊக்கி ஆக்கம் விளைக்கும் முறையில், புலவர் மாணவர் தேர்வு ஒன்றும் நடத்தி ரொக்கப் பரிசு ரூ. 300 வரை கொடுத்தும், தகுதித்தாள்களும் வழங்கியுள்ளார்கள். புலவர்களாவோர் மெய்ந்நூற் பொருளும் உணர்ந்தவர்களாய்த் திகழவேண்டுமென்ற அறிஞர் விருப்பம் நிறைவேறும் வகையில், சித்தாந்தத் தேர்வும் 1952 ஜூலை இறுதியில் நடத்த ஏற்பாடாகி யுள்ளது. தொடக்கப்பள்ளி, நடுப்பள்ளிகளில் பயின்றுவரும் இள மாணவர்கள் நீதிநூலிலும் சமயநூலிலும் பயிற்சி சிறிது அடையும் வண்ணம் அவர்களுக்குத் தனித்தேர்வும் ஏற்பட்டுள்ளது.

இங்ஙனம், தம் தமையனார் அடிவழி ஒழுகிக் கழகப் பணியை நாமெலாம் கண்டு மகிழ உளங்கொண்டு சிறப்புற ஆற்றிவரும் நம் **சுப்பையா பிள்ளையவர்கள்** எதிர்பாராத கடு நோயினின்றும் நம் உள்ளம் உவக்கும் வண்ணம், விடுதலை பெற்று, நம்மிடை வந்திருந்து தம் பணியை முன்னினும் பன்மடங்கு பணிவுடனும் துணிவுடனும் ஆற்றிவருகின்றார். இறைவன் இவர்க்கு நீண்ட நல்வாழ் வளித்தருள்க.

இவ் யாண்டில் இவ் வறிக்கையைத் தங்கட்குத் தெரிவிக்க இடம் உதவிய இறைவன் திருவருளை வழுத்துகின்றேன்.

**கழகம் வாழி ! தமிழ் வாழி ! சைவம் வாழி ! பங்காளிகள் வாழி !**

---

## நாடு

நாடு என்பது நிலத்தைமட்டும் குறிப்பதன்று; அதனிடத்து வாழும் மக்களின் பண்பையும், கலை, செல்வம், அறம், வீரம் முதலிய யாவும் ஒருங்கே அமைந்த வற்றாவளத்தையுமே குறிப்பதாகும். இதனை,

“ நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு ”

எனவரும் வள்ளுவர் வாய்மொழியும்,

“ நாடாக ஒன்றோ காடாக ஒன்றோ
அவலாக ஒன்றோ மிசையாக ஒன்றோ
எவ்வழி நல்லர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே !”

எனவரும் ஔவையார் நிலவாழ்த்தும் இதனை வலியுறுத்தும்.

**செல்லூர்க்கிழார்.**

---

# நான் கண்ட புலவர்பெருமக்கள்

[திருவாளர். சித்தாந்தப் பேராசியர், ந. சிவகுருநாத பிள்ளையவர்கள்]

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 31-வது ஆண்டு பங்காளிகள் பொதுக்கூட்டம் கூடிய 15-3-52-க்கு மறுநாள் வழக்கம்போற் கூட்டப்பெறும் ஆண்டுச் சொற்பொழிவுக் கூட்டம் 16-3-1952 ஞாயிறு மாலை $6\frac{1}{4}$ மணிக்கு, திருநெல்வேலிக் கூடல் தருமபுரம் மடாலயத்தில் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மகாசந்நிதான 'முத்தமிழ் அரங்க'த்தில் கூடியது. நகரிலும் சுற்றூர்களிலுமிருந்து அறிவுடைப் பெருமக்கள் இரண்டாயிரத்துக்குமேற் குழுமியிருந்தார்கள்.

கடவுள் வாழ்த்துக் கூறப்பெற்றதும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர், திருவாளர். வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கூட்டம் நடைபெறுமுறை, சொற்பொழிவாளர்கள்திறம், பொருள் முதலியவற்றை எடுத்து வியந்து கூறி, முதற் சொற்பொழிவாளராகிய திருவாளர். ந. சிவகுருநாத பிள்ளை அவர்கட்குப் பூமாலை புனைந்து விரிவுரை செய்தருளும் வண்ணம் வேண்டினார்கள்.

ஆட்சிப் பொறுப்பாளர் வேண்டுதற்கிசைந்த பேராசிரியர் அவர்கள் தங்கள் சொற்பொழிவைச் செய்யலானார்கள்.

கடந்த 31 ஆண்டுகளாக, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பேரவையை ஒட்டிச் சொற்பொழிவுக் கூட்டங்களும் பல ஆண்டுகளாக நடைபெற்றுவருகின்றன. இம்முறையில் இன்றையக் கூட்டம் நடைபெறுகிறது. இவ்வுலகில் அடியேன் தோன்றி 79 ஆண்டுகள் நிறைந்து வருகிற ஆடியில் 80 வரப்போகிறது. இங்கு குழுமியுள்ள ஆண் பெண் இருபால் மக்களுளும் யானே மூத்தவன் எனக் கருதுகின்றேன். நான் அறிந்தவற்றைச் சொல்லவேண்டுமென விரும்புகின்றேன்.

> " தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
> செல்வரும் சேர்வது நாடு " (திருக்குறள் : 731)

என்று வள்ளுவனார் கூறிய குறட்பொருளை ஆராய்வோம். குன்றாத விளையுளைச் செய்வோரும், அறவோரும், கேடில்லாத செல்வமுடையோரும் ஒருங்கு வாழ்வதே நாடாவது. செல்வரும் அறிஞரும் ஒரு நாட்டிற்கு வேண்டப்பெறும். தக்காரை வெளிப்படுத்தி ஆதரிக்க வேண்டுவது செல்வர் கடமை. நம் நாட்டில் தக்கார் பலர் தோன்றிப் பல உண்மைகளை விளக்கி

யுள்ளார். அவை நூல்களாக நமக்குப் பயன் அளிக்கின்றன. எல்லாம் நம் சிற்றறிவிற்கு எட்டுவன. அறிஞர்கள் தம் பிறப்புக்களிற் கண்ட நுண்மைகளை நூலாகக் கண்டனர்.

"மதிநுட்பம் நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை" (திருக்குறள் : 636)

நூலறிவும் இயற்கையறிவும் பெருகுதல் வேண்டும். நூல்கள் பல செய்த ஆன்றோர்களால்தான் தக்க தகாதன அறிந்து தெளியப்படும். தக்க இன்னது, தகாதது இன்னது என்பதை ஒக்க உன்னவேண்டும்.

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" (திருக்குறள் : 300)

அஃதாவது யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள், யாதொரு தன்மையானும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப் பட்ட பிற அறங்கள் இல்லை எ-று. தங்கண் மயக்கம் இன்மையின் பொருள்களை உள்ளவாறு உணரவல்லராய்க் காமவெகுளிகளின்மையின், அவற்றை உணர்ந்தவாறே உரைக்கவும் வல்லராய இறைவர் உலகத்தார் உறுதி எய்துதற்பொருட்டு அருளாற் கூறிய ஆகமங்களே மெய்யுணர்த்துவன. அவை எல்லாவற்றினும் வாய்மையே சிறந்த அறமெனப்படும். இங்ஙனம் வாய்மையை வரையறுத்தம்மைபோன்று பிற பெரியார்களும் அங்ஙனம் வரையறுத்தார்கள். சங்கப் புலவர்கள் அத்தகைய வரையறைகண்ட பெரியார்கள் ஆவர். அவர்கள் நுண்ணறிவுண்மையை நமக்குப் புலப்படுத்துகிறார்கள்.

இலக்கணங்கள் இலக்கியங்கள் நீதிநூல்கள் முதலியவற்றால் நம் அறிவைப் பண்படுத்தியுள்ளார்கள். சங்கப் புலவர்கள் செய்த நூல்கள் சிறந்தன என்பதை இவ்வரங்கில் சென்ற திங்களில் கூட்டப்பட்ட "பத்துப்பாட்டு" மாநாட்டின் மூலம் நன்கு தெரிந்துளோம்.

நூற்றாண்டுக் கொருமுறையோ, சில நூற்றாண்டுகட்கொரு முறையோ சில மதிநுட்பப் பெரியார்கள் தோன்றுவார்கள். எனது 18-வது ஆண்டு முதல், நம் நாட்டில் நம் தமிழும் சைவமும் வளர உதவிபுரிந்த பெரியார்களைப்பற்றிச் சில குறிப்புக்களை மட்டும் இன்று கொடுக்க முன்வந்துளேன்.

தாய்மொழியையும் சமயத்தையும் போற்றிப் பெருமை தரும் மக்களைப்பெற முயற்சிப்பதே பெற்றோரின் பெருந்தவமாம். சைவ சமயந் தழைத்தோங்க விழைந்த சீகாழிச் சிவ

பாதவிருதயர் திருஞானசம்பந்தரைப் பெற்றுவந்தார். அங்ஙனமே பிற பிற ஆசிரியன்மார்களும் அவரவர்கள் பெற்றோர் பெருந்தவத்தால் தோன்றிச் சைவத்தையும் தமிழையும் பேணி வந்துளார்கள்.

## க. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரவர்கள்

நந்நாட்டில் பண்டை இலக்கண உரையாசிரியர்களாகிய இளம்பூரணர், நச்சினார்க்கினியர், பரிமேலழகர், சிவஞானமுனிவர் முதலியோர் போன்றவர்கள் தோன்றித் தமிழுக்கும் சைவ சமயத்துக்கும் புரிந்துவந்த திருப்பணிகளைப்பின்பற்றிச் செய்யத் தக்க ஆற்றல் அறிவு முதலியன படைத்தவராக **ஆறுமுக நாவலர்** என்பவர்கள் பத்தொன்பதாவது நூற்றாண்டில் சித்திரபானு மார்கழித்திங்கள் 5-ம் நாள் புதன்கிழமை சிங்கவோரையில் யாழ்ப்பாணத்தில் நல்லூர் என்ற சிறந்த ஊரில் ஞானப்பிரகாச சுவாமிகள் மரபில் வந்த கந்தர் என்பவருக்கு, சிவகாமியம்மையாரிடம் தோன்றினார்கள்.

இவர்கள் அரும் புலமைச்செயல்களைப் பாராட்டி, திருவாவடுதுறை மகா வித்துவான், திரு. மீனாட்சிசுந்தரப் பிள்ளையவர்கள்,

“ மன்னுபெருந் தமிழ்ப்பாடை இலக்கணமும்
இலக்கியமும் வரம்பு கண்டோன்
பன்னுசிவ புராணங்கள் பலதெரிந்தோன்
சிவாகமநூற் பரவை மூழ்கி
உன்னுமனு பூதியெனும் விலைவரம்பி
லாமணிகை யுறக்கொண் டுள்ளான்
இன்னுநய குணத்தினனாய்ச் சைவம்எனும்
பயிர்வளர்க்கும் எழிலி போல்வான் ”

என்று பாடியுள்ளார்கள்.

சென்னபட்டினத்து உயர்நீதிமன்றநடுவர் கனம். தி. சதாசிவ ஐயரவர்கள், “நாவலரைப்போல முன்னும், பின்னும் இப்பொழுதும் தமிழ் வித்துவான்களில்லை; ஒருவேளையிருந்தாலும் அவரைப் போலத் தமிழ் மொழியையும் நல்லொழுக்கத்தையும் சைவ சமயத்தையும் வளர்த்து நல்ல தமிழ் வசனநடையில் நூல்களை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தித் தமிழ் நாட்டாருக்கு உதவி செய்தவர் வேறொருவரும் இல்லை; பொருள் வரும்படிக்காகப் பிறரை வணங்காதவர்களும் அவரைப்போல் ஒருவரும் இல்லை,” என்று சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைப் பரிசளிப்புவிழாக் காலத்துப் பேசியிருப்பது யாவரும் அறிந்து மகிழத்தக்கது.

## ௨. யாழ்ப்பாணம் சபாபதி நாவலர் அவர்கள்

நம் ஆறுமுக நாவலர் அவர்கள் தோன்றி இருபத்திரண்டாண்டுகளாகுங் காலத்தில், யாழ்ப்பாணத்து வடகோவையில், சைவவேளாளமரபிலே சுயம்புநாதபிள்ளை என்பார் செய்தவத்தின் அரும்பயனுய்த் தெய்வயானை அம்மையாரிடம் பிற்காலத்தில் நாவலரேறு என்று சாற்றத்தக்க சிறப்படைந்த சபாபதி நாவலர் அவர்கள் தோன்றினர்கள். இவர்கள் வடமொழி தென்மொழியிலும் ஆன்ற புலமையடைந்ததுடன் ஆங்கிலமும் பயின்றிருந்தார்கள். ஆறுமுக நாவலர் அவர்கள் விரும்பியவாறு சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தலைமைத் தமிழ்ப்போதகாசிரியராக அமர்ந்திருந்தார். திருவாவடுதுறையை அடைந்து அவ்வாதீனத்துப் பதினுருவது மகாசந்நிதானமாக விளங்கிய அருட்டிரு சுப்பிரமணியதேசிக சுவாமிகள் அருளுரை பெற்று, அவர்கள் முன்னிலையில் பன்னீரியாண்டு ஞானநூல்களை எல்லாம் மரபுவழுவாது கற்று வல்லவராய், இலக்கண இலக்கிய தருக்க வேதாந்த சித்தாந்தக் கடலாய், அவ்வாதீன வித்துவ சிகாமணியாய் விளங்கிவந்தார்.

அவையோர் வியக்கச் சொல்லும் உரைவன்மையினையும், நிகழ்த்தும் சைவச் சொற்பொழிவுச் சிறப்பினையும், மாயாவாதி முதலிய குதர்க்கர்களும் பிறரும் நாவடங்கச் செய்யும் நியாய வாதச் சொற்போர் வெற்றியினையுங் குறித்து மகா சந்நிதானம் அவர்கள், ' நாவலர் ' என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தார்கள். தங்கள் ஆதீன ஞானநிதி (பேரறிவுக் களஞ்சியம்) ஆகிய சிவஞானபோத மாபாடியத்தைப் போற்றத்தக்கார் நாவலர் அவர்களேயென்று மதித்தளித்தார்கள். நாவலரவர்களும் அப்பாடியக் கலையைக் கைக்கொண்டு வழிபட்டு ஆராய்ச்சி செய்துவந்தார்கள். சைவசமய வளர்ச்சி நாடிச் சென்னையில் தங்கியும், தமிழ்நாடெங்கும் சுற்றியும் தம் அழகிய சொற்பொழிவுகளாலும் தாங்கள் எழுதிய நூல்களாலும் பத்திரிகைகளாலும் நற்பணி புரிந்துவருவதை நாட்டிலுள்ள மடாதிபதிகளும் குறுநில மன்னர்களும் பெருநிலக் கிழவர்களும் பலபடப் புகழ்ந்து பேசியும் எழுதியும் வந்தார்கள். இராமநாதபுரம் திரு. பாற்கர சேதுபதி அவர்கள் நாவலர் அவர்கட்கு எழுதிய கடிதங்களில், சைவ சிகாமணியாயும் பரசமயகோளரியாயும், சைவப் பயிர் தழைக்கச் சொல்லிடி முழக்குடனும் விபூதி உருத்திராக்கப் பொலிவாகும் மின்னலுடனும் ஓங்கி வளரும் ஒரு முகிலாகியும் விளங்குகின்றவர்களே ! தங்கள் சொற்பொழிவமுதத்தை நுகர்ந்து எம்பதிக்குடிகள் சைவ உண்மைகள் தெளிந்தின்புறும் வண்ணம் சைவசித்தாந்த போதஞ்செய்து

நலப்படுத்துங் கடப்பாட்டினைத் தாங்கள் மேற்கொள்ளவேண்டு மென்று வற்புறுத்தி வேண்டியுள்ளார்கள். மதுரைத் திருஞான சம்பந்த மடாதிபதிகளும், சூரியனார் கோயிலாதீன மடாதிபதி யான திரு. முத்துக்குமார தேசிக சுவாமிகளும், துறைசை யாதீனத் தலைவரவர்களைப் போலவே பாராட்டி ஊக்கிவந்துள் ளார்கள்.

சைவசித்தாந்த சமயக் கொள்கைகளை நாடெங்கும் பரப்ப விழைந்த நாவலரவர்கள் நோக்கை நிறைவேற்றும் வகையிற் பெருந்துணையானவர்கள் அரச முனிவராம் பாற்கர சேதுபதி யவர்களே. இவர்கள் முகவையில் பல நாட்கள் வாரங்களாகச் சொற்பொழி வாற்றுவித்து மக்கள் சமயப்பற்றையும் உணர் வையும் பெருக்கிவந்தது போல் மற்ற ஊர்கட்கும் நாவலர் அவர் களுடன் புனித இடங்கட்குப் போய் வரலாயினர். திருவுத்தர கோச மங்கையில் "வேத நெறி தழைத்தோங்க" என்னும் பொருளைப் பெரிதும் விரித்துப் பெருஞ்சொல் ஆற்றுவித்தனர்.

பின் நம் மாவட்டத்தில் தூத்துக்குடி வழியாகச் செந்தி லாண்டவனைக் கண்டு வழிபாடாற்றிவரப் புறப்பட்டார்கள். திருமந்திரநகர்ச் சைவப் பெருமக்களின் வேண்டுகோட்படி, ஆனி 30-ஞாயிற்றுக்கிழமை திருக்கூத்தப் பெருமான் திரு முன்பில், "அருந்துணையை அடியார் தம் அல்லல் தீர்க்கும் அருமருந்தை" என்ற தேவாரத் திருப்பாட்டின் பொருளைப் பொருளாகக் கொண்டு மிக விரிவான சொற்பொழி வாற்றினார் கள் நம் நாவலர் அவர்கள். பின் புவிவேந்தருடன் செந்திலம்பதி அடைந்த நம் கவிவேந்தர், ஓர் ஆடி வெள்ளியில் "மிகுசைவத் துறை விளங்க" என்னும் பொருளை அடிப்படையாகக்கொண்டு ஒரு மூன்றரை மணி வேளை கேட்போர் வியப்புறப் பேசியுள் ளார்கள். மேல் ஆவணித் திங்களில் திருக்குற்றாலம் அடைந்து "கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்" என்னும் திருவாசகச் சுருதிப் பொருளை விரித்துரைத்தார்கள். இங்ஙனம் நாவலரவர்கள் அளித்த செவி விருந்தருந்திய சேதுபதியவர்கள் தம்பதிக்கு அழைத்துச் சென்று தாம் அத்தாணி கொண்டு வீற்றிருக்கும் உத்தியான மண்டபத்தில் உயரிருக்கை யளித்து இன்னுரைகள் பல புகன்று பரிசிலாக ரூபா மூவாயிரமும் உட னுதவி "மேலும் வேண்டுவன புரிதருவோம்," என்று பாராட்டி யுள்ளார். சைவ முதலாக விளங்கும் சேதுபதியவர்கள்பால் விடைபெற்று, திருப்பூவணம் திருவாலவாய் முதலிய தூய தளிகளை வழிபட்டுச் சென்னை நகரடைந்தனர்.

பரிசிற்பொருளைக் கொண்டு "சித்தாந்த வித்தியாநுபாலன யந்திர சாலை" ஒன்று ஏற்படுத்தி அதன் வாயிலாக 'ஞானாமிர்தம்'

என்னும் செந்தமிழ்ப் பத்திரிகையை நான்முறையில் நடத்தி வந்தார்கள். பிரமவித்தியாப் பத்திராதிபர், 'ஞானமிர்தம்' என்னும் ஓர் அமிர்தம் புத்தியென்னும் மந்திரத்தாற் கடைய ஓர் நாவலர் என்னும் திருப்பாற் கடலில் பிறந்து உலாவுகின்றது," என்று புகழ்ந்துள்ளார்,

இவர்கள், பிரமாதிச் சித்திரையில் "ஏசுமத சங்கற்ப நிராகரணம்" என்னும் செய்யுள் நூலையும், பார்த்திப வைகாசியில் சிதம்பர மான்மியம் ஐந்தனுள் ஒன்முன ஏமசபாநாத மான்மிய மொழி பெயர்ப்பாக 893 செய்யுளில் "சிதம்பர சபாநாத புராணமும்" தாதுவில் திருச்சிற்றம்பல யமக அந்தாதியும், விரோதியில் திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத் தந்தாதியும் இயற்றி வெளியிட்டுள்ளார்.

அப்பயதீட்சிதர் இயற்றிய 'சிவகர்ணமிர்தத்தையும், பாரத தாற்பரிய சங்கிரகம், இராமாயண தாற்பரிய சங்கிரகம் என்னும் நூல்களை மொழிபெயர்த்து வெளியிட்டதுடன், அரதத்தா சாரிய ரியற்றிய சதுர்வேத தாற்பரிய சங்கிரக வசன மொழி பெயர்ப்பும் வெளியிட்டுள்ளார்.

இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு, வைதிக காவிய தூஷண மறுப்பு, முதலியவை வெளியிட்டதுடன், மாதவச் சிவஞான யோகிகள் இயற்றிய சிவசமவாத மறுப்பையும் வெளியிட்டனர். தெய்வத் தமிழ்நூல்களுட் சிறந்தவற்றைச் செவ்வனுடியிற் செறித்து இனிது விளக்கி அவற்றின் முறைமையையும் பயனையும் எடுத்துக் காட்டுவதான 'திராவிடப் பிரகாசிகை' என்ற அரும்பெரு நூலை 1899 விகாரியில் தமிழுலகம் பெற்று மகிழ வெளியிட்டார்கள். இந்நூல் 'தென்மொழி வரலாறு' எழுதிய மானிப்பாய் ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை அவர்கட்கும், 'தமிழ் வரலாறு' எழுதிய மட்டக் களப்பு. ச. பூபாலபிள்ளை அவர்கட்கும் பேருதவியாயிருந்தது.

பின்னர், சுபகிருது வருடத்தில், திருமயிலையில் தங்கியிருக்கும்பொழுது, திருமயிலைக் கபாலீசுரர் திருமுன் மண்டபத்திலும், திருவள்ளுவனார் திருக்கோயிலிலும் பெரும் புலவர்கள் வியந்தெடுத்துப் போற்றுமுறையில் சொற்பொழி வாற்றினார்கள். கபாலீசுரர் திருநாட் காலத்தில் "கற்றுக்கொள்வன வாயுள நாவுள" என்பதுபற்றியும், மற்றோர் பொழுதில்

"தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்" (திருக்குறள்: 348)

என்னுந் திருக்குறளைப் பொருளாக வைத்துக் கேட்போர் தம் வயமிழந்து சித்திரப் பாவைபோல் நிற்கச் சொல்மழை பொழிந்

துளார். பெரிய புராணத்திற்குத் தெளிவுரை யொன்று எழுதி வெளியிடப் பெரிதும் விழைந்திருந்தார்கள். 1903-ல் சிதம்பரத்தில் கூத்தப் பெருமான் தூக்கிய திருவடியை வழிபட்டு வருங் காலத்தில், தாம் எழுதிய "தேவர் குறளும் திருநான்மறை முடிவும்" என்ற வெண்பாப் பொருளை மறுத்தெழுதிய உரையைக் கண்டுவந்தனர். தமக்குப்பின் தூய செம்மையான உயர்தர நடையில் தமிழ் எழுதுகின்றவர் இருக்கின்றார் என்றறிந்ததே அம் மகிழ்ச்சிக்குக் காரணம். இவ் வுயரிய நடையைக் கண்டார் உளங்கொளுங் கதிநடையை இவ் விருபதாம் நூற்றாண்டில் தமிழும் சைவமும் துறைபோய மறைமலை யடிகளையன்றி வேறெவர் எழுதவல்லார்? தம் ஆசிரியர் அருட்டிரு. சோமசுந்தர நாயகரவர்களின் விருப்பப்படி இம் மறுப்பும் எழுதப் பட்டதாம்.

பின் தம் இறுதிக்காலம் நெருங்குவ துணர்ந்த நாவலர் அவர்கள், தம் தமையனார், மைத்துனர் சிவப்பிரகாச பண்டிதர், ச. பொன்னம்பல பிள்ளை, சுவாமிநாத பண்டிதர் முதலியவர்களை அழைப்பித் திருத்தி அவர்கள் கேட்டு மகிழுமாறு "பவனமாய்ச் சோடையாய்" என்னும் ஆரூர்த் தேவாரப் பொருளுரைத்தருளினர். கேட்டுவந்தார் மனங்கலங்கும் வகையில் சிறிது பொழுதில் பொன்னம்பலக் கூத்தன் பொன்னார் திருவடி புகுந்தனர்.

இவர்கள் மாணாக்கர்களாக சிதம்பரம் - அ. சோமசுந்தர முதலியார், விழுப்புரம் - இராமசாமிப் பிள்ளை, மாகறல் - கார்த்திகேய முதலியார், மயிலை - க. சிங்காரவேலு முதலியார், மாவை - விசுவநாத பிள்ளை, சிதம்பரம் - சிவராமச் செட்டியார், திருமயிலை - பாலசுந்தர முதலியார், சுழிபுரம் - சிவப்பிரகாச பண்டிதர் முதற் பலர்.

ஏபரவும் எந்நூலும் பிரசங்கம் செயுந்திறலால் இணையி லாதான்
சீபரவிப் புவித்தருக்கும் புலவாகளுக் கெல்லாம்ஓர் சிஙகம் போல்வான்.

என்று பாராட்டப்பெற்ற நாவலர் வாழ்க்கைச் சுருக்கம் இது.

## ௩. இராவ்பகதூர். சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள், பி.ஏ., பி.எல்.

இவர், ஈழநாட்டில் யாழ்ப்பாணத்தில் சிறுப்பிட்டி என்ற ஊரில் வைரவநாத பிள்ளை என்பாரின் அரும் புதல்வராக 12-9-1832-ல் தோன்றினார். இளம்பருவத்தில் வட்டுக்கோட்டைக் கல்லூரியிற் கல்வி பயின்றார். தமிழ் இலக்கண இலக்கியங்களைச் சுன்னாகம்-முத்துக்குமாரக் கவிராயர் அவர்களிடம் முறையே கற்றுணர்ந்தார். இவருடைய தமிழார்வம், நினை

வாற்றல், நுண்மாண் நுழைபுலத் திறம் இவற்றைக் கண்டு மகிழ்ந்த ஆசிரியர் நெவின்ஃசு தமிழ்ப்பண்டிதர் என்னும் பட்டம் சூட்டினர். தமிழ்மொழி பிள்ளையவர்களால் சிறப்படையுமென்றும் நல்லுரை கூறினர்.

1857-ம் யாண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் நடத்திய பிரவேசத் தேர்விலும், பின் பி. ஏ. தேர்விலும் தேர்ச்சியடைந்தார். (சென்னை அக்கௌண்டெண்டு ஜெனரல் ஆபீசில்) சென்னை மாகாண அரசியல் வரவு செலவுக் கணக்குத் தணிக்கை நிலையத்தில் தலைவராக வேலைபார்த்துவருகின்ற காலத்திலேயே விடாமுயற்சியும் ஊக்கமும் மிகுந்தவராய் முதல் முதலாக நடந்த பி. எல். பட்டத் தேர்வும் எழுதித் தேர்ச்சிபெற்றார். பி. ஏ. பட்டம் பெற்றபின்னர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி யாசிரியராகவும், கள்ளிக்கோட்டை அரசினர் கல்லூரித் தலைமை ஆசிரியராகவும் அமர்ந்திருந்தார். வரவுசெலவுக் கணக்கு நிலையத்திற் பணியாற்றி வருகையில், எவ்வேலையையும் வல் விரைந்து முடிக்கும் சுறுசுறுப்பும் திறமையும் வாய்ந்தவர் என மேனிலையாளர்களால் நன்கு மதிக்கப்பட்டனர். பி. எல். தேர்வான சில்லாண்டில் 1887-ம் யாண்டுமுதல் புதுக்கோட்டை உயர்நிலை அறம்பகர்மன்ற நடுவராக வேலை பார்த்துவரலானார். வழக்குகளை நடுவுநிலை தவறாது கேட்டு முடிவுசெய்த தீரர். இவர் திறல் எப்பெரியாராலும் போற்றப்படுவதாயிற்று.

தமிழ்ப்பெரு நூல்களை அச்சியற்ற முயன்றவருள் மிக உழைத்தவர் நம் தாமோதரம் பிள்ளை. இவர், வீரசோழியம், கலித்தொகை, இறையனாரகப்பொருள், தொல்காப்பியம் பொருளதிகாரம், இலக்கண விளக்கம், சூளாமணி என்னும் பெருநூல்களை ஆராய்ச்சி மிக்க பதிப்புரையுடன் வெளியிட்டவர். இவர் பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார். யாழ்ப்பாணத்தில் எழாலை என்னும் இடத்தில் தமிழ்ப்பாடசாலை ஒன்று நிறுவித் தக்க ஆசிரியர் வாயிலாகத் தமிழ்க்கல்வியைப் பரப்பிவந்தார்.

தமிழ் இலக்கண இலக்கியங்களிற் பயிற்சி எவ்வளவுடையவரோ அவ்வளவிற்குக் குறையாத பயிற்சி, சைவ நூல்களிலும் திருக்குறள் நாலடிபோன்ற நீதிநூல்களிலும் உடையவர். உரையும் பாட்டுமாகச் சைவமகத்துவம், கட்டளைக் கலித்துறை என்னும் நூல்களும், நட்சத்திரமாலை, சூளாமணி வசனம், வாசக புத்தகங்கள் முதலியவைகளும் தாமே எழுதி வெளியிட்டுள்ளார். இவர் பழம்பெரு நூல்களைப் பாதுகாப்பதிலும், ஏடுகளைத் தேடி ஆய்ந்து அச்சிட்டு வெளிப்படுத்துவதிலுமே தம் பெரும் பொழு

தையும் பொருளையும் செலவழித்துவந்தவர். பழநூல்களைப் பதிப்பிப்பதில் பதிப்பிக்கின்றவர்க்கு ஏற்படும் அல்லல்கள் இத்துணையென்பதை இவரும் இவரைப்போன்று எண்ணிறந்த பல பழ ஏட்டுச்சுவடிகளைப் பழுதுபார்த்து அச்சிட்டுதவி மகாமகோபாத்தியாயப் பட்டம் பெற்றுயர்ந்த திரு. உ. வே. சாமிநாதையர் போன்ற சிலருமே அறிவர். இவர்கள் பரிசோதனுசிரியர் என்ற பாகுபாட்டிற் சேரவேண்டியவர்கள்.

தமிழாங்கிலத் தனிப்பெரும் புலவராகத் திகழ்ந்த பூண்டி-திரு. அரங்கநாத முதலியார் இவருடைய உணர்ச்சியொத்த பெருநண்பர். இருவரும் தாந்தாங்கொண்ட தமிழார்வத்தை இமிழ்திரை வைப்புக்கு எடுத்துக்காட்டுவார் போன்று சிலபல செய்துளார்: சிவசம்புப்புலவர் கவிகளையும், மாயூரம் வேதநாயகம் பிள்ளை கவிகளையும் தம் பாடலால் வியந்து கூறுவர். கல்விகற்போர் பலர்க்கும் தாமே வேதனங்கொடுத்துக் கற்பித்தவர். நட்டார்க்கும் கற்றூர்க்கும் இனியவர். இவர் இளமையில் பெர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோட்கிசைந்து 'தினவர்த்தமானி' என்ற தமிழ்வெளியீட்டின் ஆசிரியராகவும் இருந்துளார். இக்காலம் பாதிரியாருடன் பழக நேர்ந்தமையிற் சிலர் இவர் கிறித்துமதக் கோட்பாடு கொண்டவர் என்று குறை கூறலானூர்கள். ஆனல் பின்னர், சைவமகத்துவத்தில் இவர் பாடியுள்ள பாடல் இவர்தம் மெய்ம்மையைப் புலப்படுத்துவதாயிற்று.

"பூவில் மெய்ம்மதம் இது இது பொய்எனப் புகலுவ தரிதேயோ
நாவி னல்மனத் தால்நவின் றுணர்வரு ஞானசா கரமாமெய்த்
தேவ வாசகம் யுத்தியிற் கடீதமாம் திறம்புமோ மனுவாலே
மேவும் எவ்வெவ வேதமும் திறம்புமநல் விஞ்சையால் அளப்
　　　　　　　　　　　　　　　　　　　　　　　　[பின்னே"

இவர் கீரிமலையில் தங்குதற்கும் கீரிமலை யிறைவரைப் பாடுதற்கும் பெருவிருப்புடையர் நகுலேசருஞ்சலும் பாடுவித்தவர்.

இவர் செய்த நன்மையைப் பாராட்டிச் சென்னை அரசியலார் இவருக்கு 'இராவ்பகதூர்' என்னும் பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தினர். பிள்ளையவர்கள் தமிழ் பயிலும் மாணவர்கட்கு ஏற்ற தமிழ்நூல்கள் அமைத்து ஒழுங்கு செய்வதில், சென்னைப் பல்கலைக்கழகத்திலும், துரைத்தனத்தார் பாடப்புத்தகக்குழுவிலும் உறுப்பினராயிருந்து உழைத்துவந்தது உலகறிந்தது.

பிள்ளையவர்கள் அகநானூற்றை யாராய்ந்து அச்சிடுதற்கு முயன்றுவருங் காலத்தில் அஃது நிறைவேறுமுன் 1901 சன

வரித்திங்கள் முதல்நாள் சிவனடி நீழலடைந்தின்புறலானார்கள். பிரிவாற்றாது இரங்கிப்பாடிய புலவர்கள் பலர். மகாமகோபாத்தியாயர் திரு. உ. வே. சாமிநாதையர் பாடல் அடியில் வருவது :—

“தொல்காப் பியமுதலாந் தொன்னூல் களைப்பதிப்பித்
தொல்காப் புகழ்மேவி உய்ந்தபண்பின்—அல்காத
தாமோ தரச்செல்வன் சட்டகநீத் திட்டதுன்பை
யாமோ தரம்இயம்ப வே.”

பிள்ளையவர்கள் உணவருந்துகையில் படைக்கப்பட்ட எப்பொருளையும் கழித்து மிகுத்துவைக்கும் பண்பற்றவர். ஆண்டு முதிர்ச்சிக்காலத்து நீரிழிவு நோய் ஏற்பட்ட இடத்தும், விலக்கிக்காக்கவேண்டிய இனிப்புப்பொருளையும் வெறாதே யுட்கொண்டவர்.

---

## இன்தமிழ்த் தாய்

[நெல்லை, திரு. க. சுப்பிரமணியன்]

அரசியல் மொழியா அமைந்த தெனினே
வரம்பும் வளமையும் இலதொரு மொழியும்
உறுபெருஞ் சிறப்புப் பெறுதலும் இயல்பே !
உரிமையை நெடுநாள் இழந்தனன் தமிழன் ;
அரியநல் வாழ்வை எய்தினன் இலனே !
செந்தமிழ்ச் செல்வியை மறந்தனன் அன்றே ?
இந்தமா நிலத்தைத் தன்னடிப் படுத்தி
ஒருமொழி ஆண்ட காலமும் உண்டே !
இன்றமிழ் நம்மொழி தன்னாட் டுள்ளும்
புன்மொழிக் கடங்கிப் பொன்றுதல் நன்றே ?
ஒட்டிய வயிறும் உலர்ந்த மார்பும்
வற்றிய சதையின் வடிவினை நினைமின் !
தண்டுடன் தளர்ந்து தரணியில் நடக்கும்
வண்டமிழ்த் தாயை அரியணை ஏற்றுமின் !
பன்னாட் டுள்ளும் நன்கனம் நாடி
மன்னிய தமிழில் மாண்புற ஆக்கிய
கலைகளாம் உணவை நிலைபெற ஊட்டுமின் !
என்றும் கொழுந்தென இளமை திகழ
நன்றே உஞற்றுமின் இன்றே
என்புரு வாயினள் இன்றமிழ்த் தாயே !

---

# பத்துப்பாட்டிற் பறவைகள்

[செல்லூர்க்கிழார் திரு. செ. ரெ. இராமசாமி பிள்ளை]

(செல்வி—சிலம்பு உசு, பரல்-எ, ௩௩௦-ம் பக்கத்தொடர்ச்சி.)

## (௧௦) குறும்பூழ் (காடை)

இது புன்செய்களில் செடிகளின் மறைவில் பதுங்கியிருந்து வாழ்வது; தரையில் குழிபறித்துக் கூடுகட்டிக் குஞ்சு பொரிக்கும் தன்மையது; தரையில் கூடைபோட்டு மூடிக் கவிழ்த்துவைத்தால் அது மண்ணினுள் துளைத்துக்கொண்டு வெளிவந்து பறந்து செல்லுமென்பர். இதனைக் 'குறும்பூழ் பறப்பித்த வேட்டுவன்போல் அன்னை, வெறுங்கூடு காவல்கொண் டாள்' என்னும் முத்தொள்ளாயிரச் செய்யுளால் அறியலாம்.

இது குறித்துப் பத்துப்பாட்டுரைப்பது :

'கறையணல் குறும்பூழ் கட்சிச் சேக்கும்' (பெரும்பாண் : உ0ரு)

## (௧௧) நாரை

நாரை, நீர்வாழ்பறவை. யாறு கடல் வயல் ஏரி முதலிய இடங்களில் நத்தை முதலியவற்றைக் குத்தித் தின்னும் தன்மையது. அவைகளைக் குத்துதற்கேற்ப அதன் வாய்அலகுகள் நீண்டு கூரியதாக இருக்கும். இதில் **பெருநாரை சிறுநாரை கருநாரை வெள்ளைநாரை கூழைக்கடா** என்னும் பல்வகை நாரைகள் உண்டு. இவைகள் வடிவம் பெரிதாகவும் நீண்ட கால்களுடன் வளர்ந்தும் இருக்கும். இவைகளைக் குறித்து இலக்கியங்களில் பெருவரவிற்றாய் வருதலை உணரலாம். சத்திமுற்றப் புலவர் நாரையைத் தூதாக அனுப்பிய செய்யுள் இன்சுவைமிக்க பாநலமுடையது.

இது குறித்துப் பத்துப்பாட்டு ஒத்துக் காட்டுவது :

'இறவருந்திய இனநாரை' (பொருநர் : உ0ச)
'கழிநாரை வரையிறுப்ப' ( ,, : உஉரு)
'செவ்வரி நாரையோ டெவ்வாயுங் கவர' (நெடுநல் : கஎ)

## (௧௨) கோக்கு

இதுவும் நீர்வாழ் பறவை. மீன் தவளை முதலியவற்றை அவைகள் அயர்ந்தகாலை பார்த்துத் துடுமெனக் குத்தி உண்ணும் சூழ்ச்சித் திறமுடையது. இதன் குணத்தைக் 'கொக்கொக்க கூம்பும் பருவத்து' என்று வள்ளுவர் கூறுவதால் அறியலாம். இதில் **வெள்ளைக் கொக்கு, சாம்பற் கொக்கு** என இருவகை உண்டு. சாம்பற் கொக்கைக் குருட்டுக் கொக்கெனவும் வழங்குவர்.

இதுபற்றிப் பத்துப்பாட்டு உரைப்பது :

'பைங்காற் கொக்கின் மென்பறைத் தொழுதி' (நெடுநல்: ௧௫)

## (௧௩) மீன் கோத்தி (சிரல்)

இது மீன்களைப் பிடித்தருந்தும் பெற்றியது. கருநிறமும் கருமையும் வெண்மையும் கலந்த நிறமுமுள்ள இருவகை உண்டு. நீரில் நீந்திச் செல்லும் மீன்களைத் தருணங்கண்டு பாய்ந்தெடுத்து உண்ணும் நீர்மையது;

'செங்கயல் பாய்ந்து பிறழ்வன கண்டாங்கு
எறிந்தது பெறாஅது இரைஇழந்து வருந்தி
மறிந்து நீங்கு மணிச்சிரல்'

என்று இதன் தன்மையை மணிமேகலை ஆசிரியர் கூறுதலாற் றெளியலாம். இது குறித்துப் பத்துப்பாட்டில் வருவன :

'புலவுக் கயலெடுத்த பொன்வாய் மணிச்சிரல்' (சிறுபாண் : ௧அ௧)

'இரைதேர் மணிச்சிரல் இரைசெத் தெறிந்தென'
(பெரும்பாண்: ௩௧௩)

## (௧௪) பருந்து

இது பிணந்தின் பறவை; வீட்டில் வளர்க்கும் கோழிக் குஞ்சுகளை அமயம்பார்த்து எடுத்துக் காலால் தூக்கிக்கொண்டு செல்லும் சூழ்ச்சித்திறம் மிக்கது. பிணங்களைக் கொத்தித் தின்பதில் ஆர்வம்மிக்கது. இதுபற்றிப் பத்துப்பாட்டு உரைப்பது :

'பருந்துபட, ஒன்னார்த் தெவ்வர் நடுங்க' (பெரும்பாண் : ௧௧௭-அ)

'பருந்துபறக் கல்லாப் பார்வற் பாசறை' (மதுரைக் : ௨௩௧)

'பருந்திருந் துகக்கும் பன்மா ணல்லிற்' ( ,, : ௫0௨)

'பெருநல் வானத்துப் பருந்துலாய் நடப்ப' (பட்டினப் : ௨௩௩)

'தூவற் கலித்த புதுமுகை ஊன்செத்து
அறியா தெடுத்த புன்புறச் சேவல்' (மலைபடு : ௧௪௬-௭)

'பருந்துபடக் கடக்கும் ஒள்வாள் மறவர்' ( ,, : ௪அ௬)

## (௧௫) கூகை (ஆந்தை)

இதைக் கூகை எனவும், ஆந்தை, குடிஞை எனவும், பிற பெயர்களானும் வழங்கப்பெறும். இது பொந்து விழுந்த மரங் களிலும் பாழ்மனை யிடங்களிலும் இருந்து பெருங் குரலிட்டுக் கத்துந் தன்மையது. அதனால் இதன் குரல் அச்சத்தை ஊட்

டுவதாகும். இது ஊன் உணவையே விரும்பி உண்ணுந் தகையது. இதனை நாம் அடிக்கடி காண்டுமன்றோ? இதன் தன்மையைச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள், கோவலன் தன் மனைவி கண்ணகியை மதுரைக்கு அழைத்துச் செல்லுங்கால் இரவு நேரத்தில் இடைவழியில் 'அஞ்சாதே வா,' என்று அவளின் கைகளைத் தன் தோளிற் சார்த்தி,

'கொடுவரி மறுகும் குடிஞை கூப்பிடும்
இடிதரும் உளியமும் இனையா தேகென' (சிலப்; ௧௩ : ௩௧-௨)

என்று கூறிச் செல்வதும், சீவகன் சுடுகாட்டிடத்துப் பிறந்த காலை, அவன் தாய் விசையைமாதேவியார் வருந்தி அழும்போது மங்கலமின்றிக் கூகை அலறுவதை,

'கூகை குழறிப் பாராட்ட' (சீவக : )

என்று கூறுவதும் இதன் தன்மையை வலியுறுத்தும்

இதைக் குறித்துப் பத்துப்பாட்டுள் வருவன :

'கழல்கண் கூகையொடு கடும்பாம்பு தூங்க' (திருமுருகு : ௪௧)
'குடுமிக் கூகை குராலொடு முரல' (மதுரைக் : ௧௭0)
'அழுகுரல் கூகையோ டாண்டலை விளிப்பவும்'
(பட்டினப் : ௨௫௮)
'வளைவாய்க் கூகை நன்பகற் குழறவும்' ( ,, : ௨௬௮)
'குடிஞை இரட்டு நெடுமலை அடுக்கத்து' (மலைபடு : ௧௪௧)

## (௧௯) காக்கை

இது, நம்முடன் ஒன்றி வாழும் பறவை. மரங்களில் கூடு கட்டி வாழ்வதாயினும் நம் இல்லங்களில் சோர்ந்து கிடக்கும் தின்பண்டங்களைக் கரவுச் சூழ்ச்சியுடன் திருடி உண்ணுங் குணமுடையது. இது அகப்பொருட் காதலிக்கு நிமித்தம் பார்த்தலாக இலக்கியங்களில் காணக் கிடக்கின்றது. இது, தன் இனத்தோடு கூட்டுண்ணும் உயரியகுண மிக்குடையது; இதில் இரு வகை உண்டு. அண்டங் காக்கை யென்பது பெரிது; மற்றொன்று சிறிது. இச் சிறிய காக்கையே நூல்களிற் பேசப் பெறுவது. 'மறுவில் தூவிச் சிறுகருங் காக்கை' எனக் குறுந்தொகையில் வருவதால் உணரலாம். இப் புள்ளைக் குறித்துப் பத்துப்பாட்டுக் காட்டுவது :

'செஞ்சோற்ற பலிமாந்திய, கருங்காக்கை கவவு முனையின்'
(பொருநர் : ௧௮௩-௪)

## (கஎ) யானையங் குருகு

இது, நாரை வகையைச் சேர்ந்த ஒன்றாக இருத்தல் கூடும். இதைப்பற்றி நூல்களில் பரக்கக் காணப்பெறவில்லை. இதைச் சக்கரவாகப் பறவையென்றுங் கூறுவர். இது குறித்துப் பத்துப் பாட்டுரைப்பது :

'யானையங் குருகின் சேவலொடு காமர்' (மதுரைக் : ௬எ௪)

## வண்டு

இது, பறக்கின்ற தன்மையால் பறவையாகக் கொள்ளப் பெறுகின்றது. 'அறுகாற் சிறுபறவை அஞ்சிறகால் வீசும்' என்றார் புகழேந்தியாரும் இக் கருத்துப் பற்றியே. இது குறித்துப் பத்துப்பாட்டில் காணக்கிடப்பன :

'அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்' (திருமுருகு : எ௬)

ஏம இன்துணை தழீஇ இறகுளர்ந்து
காமரு தும்பி காமரஞ் செப்பும்' (சிறுபாண் : எ௬-எ)

## பறவைப் போது

மேற் கூறியவற்றுள் சில பறவைகளும் பல பறவைகளும் மரங்களில் பழம் உண்ணும் பொருட்டாகவும் தங்கும் பொருட்டாகவும் சென்று திரும்புதல், தங்குதல், வழக்கமாகக் கொண்டுள்ளன. சில பறவைகள் பல கல் தொலைவுவரை சென்று இரை தேர்ந்து உண்டு பொழுது இறங்குங்கால் கண்டு தாம் வழக்கமாக வாழும் இடத்தை நாடிப் பறந்து வந்திருப்பனவாகும். இதனை நாம் காலை மாலை வேளைகளில் அவைகள் ஒன்று கூடிப் பேரிரைச்சல் இட்டுக்கொண்டு தங்கியிருத்தலை அறிதுமன்றோ? இதுபற்றிப் பத்துப்பாட்டுக் கூறுவன :

'பழுமரம் உள்ளிய பறவையின் யானுமவன்' (பொருநர் : ௬௪)
'பழுமரம் தேரும் பறவை போல' (பெரும்பாண் : உ0)
'நள்ளிருள் விடியல் புள்ளெழப் போகி' (பெரும்பாண் : க௫௫)
'பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்' ( ,, : க௮௩)
'புள்ளார் பெண்ணைப் புலம்பு மடல்' ( ,, : ௩க௪)
'புள்ளிமிழ்ந் தொலிக்கும் இசையே' (மதுரைக் : ககக)
'பல்வேறு புள்ளின் இசையெழுந் தற்றே' ( ,, : ௫௪௩)
'பழந்தேர் வாழ்க்கைப் பறவை போல' ( ,, : ௫எ௬)
'பறவை படிவன வீழ' (நெடுநல் : க0)

'நற்கோட் சிறுதினைப் படுபுளோப்பி' (குறிஞ்சிப்: ௩௮)
'விசும்பாடு பறவை வீழ்பதிப் படர' ( ,, : ௨௧)
'புள்ளார் இயத்த விலங்குமலைச் சிலம்பின்' ( ,, : ௧௧)
'புள்ளினம் ஒலிப்ப' ( ,, : ௨௨அ)
'புள்ளிரியும் புகர்ப் போந்தை' (பட்டினப்: எ௪)
'கனிபொழி கானம் கிளையொ டுணீஇய
துனைபறை நிவக்கும் புள்ளினம்' (மலைபடு: ௫௪-௫)
'கூடியத் தன்ன குரல்புணர் புள்ளின்' ( ,, : ௨௧௧)
'புலரி விடியல் புள்ளோர்த்துக் கழிமின்' ( ,, : ௪௪அ)

என்பனவாகும். இதுகாறும் பத்துப்பாட்டில் விரவி வருகின்ற பதினெழுவகைப் பறவைகளைக் கண்டாம். நூலிற் கூறியுள்ள அவைகளின் இயற்கைகளையெல்லாம் விளக்கிக் கூறுவதாயின் பரந்துபட்டுச் செல்லும். ஆதலால், நூலிற் காட்டியுள்ள அடிகளையே ஈண்டெடுத்துக் கிளக்கலானேன். அமயம் நேர்ந்துழி விரிவுபட வரைவாம்.

இந் நூலில் தற்கால இயற்கைப் பொருள் (Scince) நூலார் காட்டும் தன்மைகட்கு மேற்பட ஒவ்வொரு இயற்கைப்பொருள் களையும் கூர்ந்து கண்டு கூறியிருக்கும் தன்மையை நோக்கின் பண்டைக்காலப் புலமைச் சான்றோரின் உயரிய நுண்ணறிவு பாராட்டத்தக்கதாக விளங்குகின்றது. தமிழில் என்ன இருக்கின்றதென்று கூறும் நுனிப்புல் மேய்வார், இந்நூல் போன்ற நன்னூலை நாடிக்கற்று நலம் பல் பெறுவாராக.

இதனுள், இன்னும் பல்வகை மரங்கள் செடிகொடிகள் விலங்குகள் முதலியவற்றின் பண்புகளும், மலை யாறு முதலிய வற்றின் தன்மைகளும், நேர்முகமாகவும் உவமவாயிலாகவும் ஆங் காங்கே பொங்கித் ததும்பிப் புகலரும் தன்மைத்தாய்ப் பொதுளிக் கிடக்கின்றன.

அயல்மொழிப் பித்தால் மயங்கிக் கிடக்கும் எம் தமிழர், இனியேனும் இவைகளை ஆய்ந்து பண்டைப் பெருமைத் திறனைத் தமிழ்நாடன்றி வேறெந்நாட்டினும் இவைகளைக் கொண்டு காட்டி வீறு பெறுவான்வேண்டி இதனை முற்றுவிக்கின்றும்.

**வாழ்க தமிழ்மொழி ; வாழ்க பத்துப்பாட்டு.**

# பத்துப்பாட்டும் வானநூலும்

[கணியர், டாக்டர். திரு. இ. மு. சுப்பிரமணிய பிள்ளை]

வானத்திலே காணப்பெறும் பொருள்களைப்பற்றிக் கூறும் நூலே வானநூலாம். அப் பொருள்கள் மின்னுதலினாலே மீன் என்று பெயர்பெறும். வானிலே உள்ள காரணத்தால் அவை வான்மீன், விண்மீன் என்று அழைக்கப்பெறும். விண்மீன்களை ஆராயும்போது அவைகள் விட்டுவிட்டு மின்னுகின்றதை நாம் காணலாம். அவைகளில் ஒருசில விட்டுவிட்டு மின்னாமல் எப்போதும் ஒருபடித்தாக ஒளிவீசுகின்றன; அத்தகையன கோள்கள் என்று பெயர்பெறுவன.

மீன்கள் இயற்கை ஒளியை உடையன. அவைகள் எண்ணில் அடங்காத தொலைவில் உள்ளன; அவைகளின் ஒளி எண்ணற்ற தூரத்திலிருந்து நம்மை நோக்கி வருகின்றமையால் மின்னுவதுபோலக் காணப்படுகின்றது. அவைகளைப்போல இயற்கை ஒளியை உடையதே நம் ஞாயிறு. அது கோடிக்கணக்கான மைல் தூரம் நம்மைவிட்டு விலகியிருந்தாலும் ஏனைய விண்மீன்களை எண்ணும்போது நமக்கு மிக அருகிலேயே இருக்கின்றது; ஆதலின் அது விட்டுவிட்டு மின்னாமல் ஒரேபடித்தாக ஒளி தருகின்றது. விண்மீன் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஞாயிறுதான்.

நமது ஞாயிறு பேரொளிப்பிழம்பாக ஒரே இடத்தில் இருக்கின்றது; அதைப்போல ஒரேபடித்தாக ஒளி தருகின்ற ஒருசில கோளங்கள் காட்சியளிக்கின்றன என்றும் அவை கோள்கள் எனவும் கூறினோம். அவைகளை ஆராயும்போது அவைகளின் ஒளி அவைகளுக்கு இயற்கையாக உள்ள ஒளி அல்ல என்பது விளங்குகின்றது; அவைகள் கண்ணாடிபோல உள்ளன; கண்ணாடி இயல்பாக ஒளி இல்லாத பொருள்; அதனைச் சூரியனுடைய ஒளியிலே காட்டினால் அது அந்த ஒளியைத் தன்மேலேகொண்டு ஒளியுடைய பொருள்போல விளங்குகின்றது. அங்ஙனமே அக்கோள்களும் சூரியனுடைய ஒளியைத் தம்மேலேகொண்டு ஒளிவீசுகின்றன; சூரியன் ஒளியைக் கொள்ளுதலினாலே அவை "கோள்" என்று பெயர் இடப்பெற்றன.

விண்மீன்கள் ஒரே இடத்தில் இருக்கின்றன; ஆனால் கோள்கள் நிலைபெயர்ந்து சுற்றுகின்றன. அவை ஏழு: சூரியன், திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி. அவை நம் தலைக்கு மேலே கூடிப்போவதை நாம் காண்கின்றோம். அவைகளின் போக்கை அளந்து அறிவதற்காக அவைபோகும் வழியில்

உள்ள விண்மீன்கள் அடையாளப் பொருள்களாகக் குறிக்கப் பெற்றுள்ளன. அகல் வானிலே காணப்பெறும் எண்ணற்ற விண்மீன்களிலே நம் உச்சிமேல் வருபவைகளைக்கண்டு அவை களிற் சிலவற்றை விண்வழியிலே அடையாளங்களாகப் பண் டைத் தமிழர் அமைத்தனர். அத்தகைய அடையாளங்கள் இருபத்தேழு. அவ் இருபத்தேழு அடையாளங்களுக்கும் அவ் வவைகளின் உருவங்களைக்கொண்டு பெயர்கள் இடப்பெற்றுள் ளன.

கோள்களின் போக்கை ஆராய்ந்து கணக்கிட்டறிந்த நம் மூதாதையர் அவ்வாராய்ச்சியை வளர்த்துக் கோள்களின் நிலையி னாலே ஏற்படும் பலன்களையும் நுணுகி ஆராய்ந்து கண்டதோடு அவைகளைத் தம் வாழ்விலே பயன்படுத்தவும் தொடங்கினர்; அவ்வாராய்ச்சிகளை அவர்கள் நூல்களாக எழுதியும் வைத்தனர். அந்த நூல்களெல்லாம் இப்போது பல காரணங்களால் மறைந்து போயின; ஆனால் அவைகளின் கருத்துக்கள் பல அக்காலத்தில் எழுந்த பிற இலக்கியங்களிலே காணக்கிடக்கின்றன. பத்துப் பாட்டு எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களை ஆராய்ந்தால் அக்கருத்துக்கள் இவை என்பதும், அவைகளை ஆராய்ந்தறிந்த மக்கள் பெருமை இன்னது என்பதும் தெளிவாகும். இக்கட்டுரை யின்பொருள் பத்துப்பாட்டிற் காணக்கிடக்கும் வானநூற் கருத் துக்களை ஆராய்வதே. அவைகளைத் தனித்தனித் தலைப்புக்களிலே தனித்தனிக் கட்டுரைகளாக விரித்து எழுதுவோம்; இங்கே முதலாவதாகப் பத்துப்பாட்டிலே காணப்பெறும் திங்களைப் பற் றிய சில குறிப்புக்களைத் தருகின்றோம்.

## க. திங்கள் :

பகலைச் செய்பவன் ஞாயிறு; அவன் நாளைப் பகுத்துத் தான் இருத்தலினாலே பகலைச் செய்கிறான். தான் இராமையி னாலே இராவையும் செய்கிறான். அதனால் இரவி என்றும் பெயர் பெற்றான். இருந்தாலும் இராப்பொழுதைச் செய்வது வெண் திங்கள் என மதுரைக்காஞ்சியில் மாங்குடிமருதனார் குறிப்பிடு கின்றார்.

"பகற் செய்யும் செஞ்ஞாயிறும்
இரவுச் செய்யும் வெண்திங்களும்" (அடிகள் 7, 8)

இருபத்தேழு விண்மீன்களிலும் இரவியும் மதியும் தங்கித் தங்கிச் செல்லுவர்; விண்வட்டம் பன்னிரண்டு வீடுகளாகப் பிரிக் கப்பெற்றுள்ளது; அதனால் ஒவ்வொரு வீட்டிலும் இரண்டே கால் இரண்டேகால் விண்மீன்கள் இருக்கும். இவ்வீடுகளும்

அவைகளின் உருவ அமைப்பினாலேயே பெயர் இடப்பெற்றுள்ளன. முதல் வீடு ஆட்டின் உருவத்தை உடைமையினாலே ஆடு எனப்பெறும். இந்தப் பன்னிரண்டு வீடுகளையும் அவைகளில் அமைந்துள்ள விண்மீன்களையும் அவைகளிலே செல்லும் வெண்திங்களையும் படமாக எழுதி அதனைக் கட்டிலின் மேற்கட்டியாக அமைத்திருந்தார்கள் அக்காலத் தமிழர்; அதிலும் திங்களை உரோகிணி என்ற விண்மீன் அருகே எழுதியிருப்பார்கள். இதனை நெடுநல்வாடையில் புலவர் தலைவராம் நக்கீரனார் பின்வருமாறு கூறுகின்றார் :

"புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பின் ஆடு தலை யாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி" (அடிகள் 159-163.)

"மெழுகு வழித்த மேற்கட்டியின்மேலே புதிதாக எழுதின திண்ணிய நிலையினையுடைய கொம்பினையுடைய மேடராசி முதலாக ஏனை இராசிகளிற் சென்று திரியும் மிக்க செலவினையுடைய ஞாயிற்றோடே மாறுபாடு மிகுந்த தலைமையினையுடைய திங்களோடு திரியாமல் நின்ற உரோகிணியை," என்று மேலேகண்ட அடிகளுக்கு உரைவகுத்துதவினர் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியர்.

---

## தி. ச. வாசுதேவன்

[திரிசை - "தமிழ் மகன்"]

### மறவாதே!

**இராகம்: கல்யாணி.** **தாளம்: ஆதி.**

எடுப்பு

மறவாதே நெஞ்சமே—இந்த
மாநிலம் போற்றும்
தேன்தமிழ் மொழியை (ம)

துணையெடுப்பு

இறவாத் தன்மையும் இனிமையும் உண்டு
இருப்பினும் வளர்ப்பது இதமெனக் கண்டு (ம)

முடிப்பு

அறநெறி தவறாத **அருந்தமிழ்** ஆட்சி
அரியணை ஏறினால் அமையுமே மாட்சி
சிறப்புற வே**பிறப் புரிமைக்கே** மீட்சி
செயல்புரிந் தாலே திகழும்மெய்க் காட்சி (ம)

# *திருவரங்கத்தந்தாதி

[திரு. சுந்தரகுமரன், புதுவை.]

இவ்வந்தாதி திருமாலின் திருப்பதிகளுள் தலைசிறந்த திருவரங்கத்துள் உள்ள பெருமாளைப் பற்றித் தெய்வத்தன்மை வாய்ந்த பிள்ளைப்பெருமாளையங்காரால், சுமார் 280 வருடங்கட்குமுன்னர்ப் பாடப்பட்ட ஒரு சிறுநூல். இது அவரியற்றிய அட்டப்பிரபந்தத்தி லொன்றாகும்.

தமிழிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களிலொன்று அந்தாதி. அது ஒரு பாட்டின் அந்தம், அடுத்த பாட்டிற்கு ஆதியாய் வரப் பாடுவது. இவ்வந்தாதி வெண்பா, விருத்தம், கட்டளைக்கலித் துறை இவைகளால் நூறு பாக்களாகப் பாடப்படும். அந்தாதிகள் பல காணப்படினும், அவற்றுள்ளும் திருப்புகலூரந்தாதி, திருவரங்கத்தந்தாதி முதலியனவே சிறந்தன.

இத் திருவரங்கத்தந்தாதி யமகம் அமையப் பாடப்பட்டது. யமகம் என்பது தமிழில் மடக்கு என்று கூறப்படும். மடக்கு என்பது—வந்த சீரேனும் அடியேனும் மறித்தும் வந்து வேறு பொருள்படப் பாடுவது. உதாரணமாக, இவ்வந்தாதியில் முதற்பாட்டில் 'திருவரங்கா' என்று தொடங்கப்பட்டது. அதே போன்று மற்றைய மூன்றடிகளின் முதற்சீர்களிலும் 'திருவரங்கா' என்று அமைத்து வேறுபொருள்பட்டுவருமாறு பாடப் பெற்றுளது. இதேபோன்று மற்றைய தொண்ணூற்றொன்பது பாடல்களும், ஒவ்வொரு பாடலின் நான்கடிகளிலும் முதலெழுத்துக்கள் சில ஒத்துநின்று வேறுபொருள் தருமாறு அமைத்துப் பாடப்பெற்றுள்ளன. இத்தகைய யமகவந்தாதி பாடுதல் இலக்கண இலக்கியவறிவு மிகுதியுமுடையார்க்கன்றி மற்றையோர்க்கு எளிதன்று.

இங்ஙனம் பாடுவதனாலென்ன பயன்? கற்றோரும் மற்றோரும் எளிதிற் பொருளுணர்ந்து இன்புறல் இயலாதன்றோ எனச் சிலர் நினைக்கலாம்.

தலைவன் இன்புறுமாறு அடியவன் பணிசெய்து அவன் அருள் பெறுவதல்லது பிறரின்புறுதலை நோக்கான். அதுபோலத் திருவரங்கநாதன் இன்புறுமாறு பாடுதற்கரிய யமகவந்தாதியைப் பிள்ளைப்பெருமாளையங்கார் பாடித் திருவரங்கன் திருவருளைப் பெற்றுள்ளார்.

---

* திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் 11-5-'51 அன்று பேசியது. இசைவுபெற்று வெளியிடப்படுவது.

இக்காலத்தும் சில புலவர்கள் பெருஞ் செல்வர்பாற் பொருள்பெற விழைந்து, கமலபந்தம் முதலிய சித்திரக்கவி களை வருந்திப்பாடி ஓவியத்தமைத்துச்சென்று அளிக்கின்றனர். அதனை அச் செல்வர்களும் விரும்பியேற்றுப் பொருள் தருகின் றனர். அன்றியும், கற்றோர் தம்பால் வரின் அதை அவரிடங் காட்டி என்னைப்பற்றிப் பாடப்பட்ட இவ்வரிய செய்யுளைக் கண் டீரோ எனவும் கூறி மகிழ்கின்றனர்.

எனவே அரிய முயற்சி, தலைவனை இன்பமடையச்செய்யும் என்பதில் ஐயமில்லை. முயற்சிக்குத் தக்க பயனுண்டென்பதை யும் நாம் அறியவேண்டும்.

மாலை கட்டுவதில் வல்ல ஓரடியவன் இறைவனுக்கு மாலை கட்ட முயலும்போது தனக்குக் கிடைத்த அரிய மலர்களைப் பத்திபத்தியாக அமைக்கவேண்டியவிடத்தே அழகுற அமைத் துக் கண்ணைக் கவருமுறையில் மாலையாக்கி இறைவனுக்குச் சாத்திக் கண்டின்பமடைவது இயல்புதானே! அங்ஙனமே இவ் வந்தாதியும் ஐயங்காரால் நல்ல சொற்களாகிய மலர்களை அமைக்க வேண்டியவிடத்தே அழகுற அமைத்து, அன்பெனும் நாரால் கட்டித் திருவரங்கநாதனுக்குச் சாத்தப்பட்ட துதி மாலையாகும்.

சங்கச் செய்யுட்களில் முதற் செய்யுளாகிய திருமுருகாற் றுப்படை எல்லாராலும் எளிதில் பொருளுணரக்கூடியதன்று. நன்கு கற்றோரே அதன் பொருளுணர்ந்து இன்புறத்தக்கவர். எனினும், அவ்வரிய பாடலைப்பாடி எந்தை முருகன் திரு வுளத்தை உருகுவித்துப் பூதத்தினாற் சிறைப்பட்டிருந்த நக்கீரர் அச்சிறையை விடுவித்துக்கொண்டாரென்பது யாவருமறிந்தது.

> "பொன்னவிர் சுணங்கு பூத்த புணர்முலைக் கருங்கண் வள்ளி
> கன்னலு மமுதுந் தேனும் கைக்குமின் றீஞ்சொல் மாற்றித்
> தன்னிகர் புலவன் கூறும் தமிழ்"

என்று அச்செய்யுள் ஒரு சிறந்த புலவராற் பாராட்டப்பட்டுளது. அஃது எளியநடை உடைத்தன்று என அறிஞரால் இகழப்பட வில்லை. பாடினோர் உயிரையுங் காத்தது. எனவே பிள்ளைப் பெருமாளையங்காரும் பாடுதற்கரிய இவ் யமக வந்தாதியைப் பாடித் திருவரங்கன் திருவருளைப் பெற்றாரென்பது ஒருதலை. ஆயின், இதனைப் பயில்வோர்க்கு இதனாலென்ன பயன்? எனச் சில அன்பர்கள் நினைக்கலாம். இத்தகைய நூல்களைப் பயில் வார்க்கு இலக்கண இலக்கியவறிவு மிகுதியுமுண்டாகும்.

பண்டைக்காலத்தே யிருந்த புலவர்கள் மாணவர்கட்கு அந்தாதி, கலம்பகம், மாலை முதலிய சிறுநூல்கள் முறையே

பாடஞ் சொல்லிவந்தனர். அங்ஙனம் பாடங்கேட்டோர் சிறந்த புலவர்களாய்த் திகழ்ந்தனர். இக்காலத்திது இன்மையால், இக்காலப் புலவர்கள் புலமையில் சிறிது குறைவுண்டென்று கூறுதல் மிகையாகாது, நிற்க.

இத்திருவரங்கத்தந்தாதி அன்பாற் பாடப்பட்டதாகையால், இக்காலத்தும் சில கிராமங்களில் வைணவ அன்பர்கள் தோத்திரமாகப் பாடித் திருமாலின் திருவருளைப் பெறுகின்றனர். பொருளறியாது பயில்வார் பயன்பெறுவரோவென்றாற் பெறுவர். எப்படியெனில் நெருப்பை நினைவின்றித் தீண்டினும் சுடுமன்றி விடுமோ! விடாதன்றே. அதுபோல், அன்பிற் சிறந்த ஐயங்காரால் பாடப்பட்ட இவ்வந்தாதியும் பொருளறியாது பயில்வாரையும் திருமாலின் திருவருளை எய்துவிக்கும் என்பது உறுதி. இனி நூலைப்பற்றி ஆராய்வோம்.

இந்நூல் யமகவந்தாதியேயாயினும், எளிதிற் பிரித்துப் பொருள் கொள்ளுமாறு அமைந்துளது. சந்தவின்பமுடையது. பத்திச்சுவை மிகுந்தது. வைணவச் சம்பிரதாயக் கருத்துக்களமைந்தது. கற்பனை மிக்கது. திருமாலே உலகிற்குத் தலைவனெனக் கூறுவது. திருமாலன்பர்க்கு அன்புசெய்ய வேண்டுமென்பதை மக்கட்கு நயம்படக் கூறுவது. அகப்பொருட் கருத்துக்கள் அழகுற அமையப்பெற்றது. பல இலக்கியக் கருத்துக்களும் இதன்பாலுள. சிறந்த அணிகளும் அழகுற இதன்பாலமைந்துள்ளன. சுருங்கக்கூறின் இந்நூல் தன்னைப் பயில்வாரை இலக்கண இலக்கியவறிவிற் சிறந்தவராக்கித் திருமாலுக்குச் சிறந்த அன்பர்களாக ஆக்கும் இயல்புடையது என்பதில் ஐயம் இல்லை.

இனி, இதன்கணுள்ள சில பாடல்களைக் காண்பாம்.

“திருவரங் காவுறை மார்பா! திசைமுகன் சேவிப்பக்கந்
திருவரங் காதரித் தின்னிசை பாடத் திருக்கண்வளர்
திருவரங் கா! உன் பழவடி யேற்கருள் செய்யவெழுந்
திருவரங் காதலித் தேனுனக் கேதொண்டு செய்வதற்கே.”

இது முதற்பாட்டு.

திருமகள் உறையும் மார்பனே! திருவரங்கநாதனே! அடியேனுக்கு அருள்செய எழுந்தருள் வரம் காதலித்தேன் உனக்கே தொண்டு செய்வதற்கே என்பது பொருள்.

நித்திரையி லிருக்குமொருவரை ஏதேனுமொன்று கேட்கப் புகுவோர் எழுப்பிக் கேட்பதுபோல வரம்வேண்டும் ஐயங்கார் திருவரங்கநாதனை அருள்செய்ய எழுந்திரு என்றார். எப்படிப்

பட்டவனுக்கோ எனப் பராமுகமாக இருக்கலாகாது என்பதைக் குறிக்க, உன் பழவடியேற்கு என்றார். அப்படி வேண்டும் வரமும் நின்சார்புடையதே என்பதைக் குறிக்க, நினக்கே தொண்டு செய்தற்கு என்றார். இங்ஙனம் வரம் கேட்கப் புகுந்த ஐயங்கார், 'திருமகள் உறையும் மார்ப' என்று முதன் முதன் விளித்துள்ளதைக் கவனித்தால், நீரெனக்கருள் செய்யாவிடின் திருமகளாகிய என் அன்னையைக்கொண்டு நும்பால் வரம்பெற வல்லேன் எனப் பயமுறுத்துகின்றார் போலும்!

இங்ஙனம் கருதி விளித்திருப்பாரா? அங்ஙனம் கருதி விளித்தவர் அரங்கனிடம் வரம்பெற்றாரா? என்று ஐயப்பட வேண்டுவதில்லை. அவ்வாறு நினைத்தே விளித்தார். விளித்ததும் பயனளித்தது. அந்த அடுத்த பாட்டில்,

"செய்ய வளைக்குரு வின்னரு ளாற்றிருத் தாள்வணங்கிச்
செய்ய வளைக்குலஞ் சூழரங் கேசன் சிறிதமுது
செய்ய வளைக்கும் புவிக்கு மங்காந்தசெவ் வாய்முகுந்தன்
செய்ய வளைக்குஞ் சிலம்பணி பாதங்கள் சேர்ந்தனமே"

என்று கூறுவதனால் அறியலாம். அதனால் முத்தியையும் பெறும் தகுதியுடையவராயினர் என்பதையும் இறுதிச் செய்யுளில் அரங்கன் திருவடி தேவரொடும் பணிகாப்பவைத்தது என்று கூறுவதனால் அறிக.

இங்ஙனம் முதற்செய்யுளில் தொண்டு செயும் வரம் வேண்டுதலாகவும் அடுத்த செய்யுளில் அவ்வரம் பெற்றதாகவும் கூறி அவ்வரத்தின் பயனாகத் தொண்டாற்றலை 97 பாடல்களாலியற்றி இறுதிச் செய்யுளில் அத் தொண்டின் பயனாகிய முத்தியடைதலைத் தாம்பெற்ற வண்ணமாகக் கூறுதல் ஐயங்காருடைய கல்வியின் திறனையும் அன்பின்றிறனையும் காட்டுகிறது.

'திருவரங்கா வுறைமார்பா!' என்றவிளி, திருவரங்கத்தில் எழுந்தருளியுள்ள நீ ஒருவருக்கு அரங்காக உள்ளாய் என்று அமைத்துப் பாடிய சொன்னயம் பாராட்டற்பாலது.

இறைவன் திருவடியைத் தன்மனத்தே கொண்டிருத்தலால் அவருக்கு யாதொரு துன்பமும் வராது என்று ஒரு பாடலிற் கூறுகின்றார். அதைக் காண்போம்.

"இடராக வந்தென்னைப் புன்சிறு தெய்வங்க ளென்செயுமான்
இடராக வன்பிணி மாநாக மென்செயும் யான்வெருவி
இடராக வன்னி புனலிடி கோண்மற்று மென்செயும் வில்
இடராக வன்னரங் கன்றிருத் தாளென் னிதயத்ததே"

என்கின்றார். "வேண்டுதல் வேண்டாமை யிலான்அடி சேர்ந் தார்க்கு, யாண்டும் இடும்பை இல" என்றே திருவள்ளுவரும் கூறினார். இங்ஙனமே சைவ அடியாராகிய திருநாவுக்கரையரும்,

"மண்பா தலம்புக்கு மால்கடல் மூடிமற் றேழுலகும்
விண்பாற் றிசைகெட்டு இருசுடர் வீழினு மஞ்சல்நெஞ்சே
திண்பா னமக்கொன் றுகண்டோம் திருப்பா திரிப்புலியூர்க்
கண்பாவு நெற்றிக் கடவுள் சுடரான் கழலிணையே"

என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறியது ஈண்டு நினைவுகூர்தற் பாலது. திருக்குறள் கருத்தமைந்த வொருபாடலைப் பார்ப் போம்.

"சென்மந் தரங்கங் கருமஞ் சுழிபிணி சேலினங்கு
சென்மந் தரங்கதிர் பொன்கோள்கண் மாரிதிண் கூற்றசனி
சென்மந் தரங்கவற் றுள்விழு வோர்கரை சேர்க்கும்வங்கஞ்
சென்மந் தரங்கவின் றோளா ரரங்கர் திருப்பதமே"

பிறப்பு - கடல். ஊழ்வினை - சுழி. பிணி - மீன்கள், நவக்கிரகங் கள் -.மழை, இயமன் - இடி இவைகள் அம்மீனினங்களாய் நீரில் வாழும் உயிர்கள். அப்பிறப்புக்களி லகப்பட்டுக்கொண்ட மனி தர்கள் அக்கடலில் விழுந்து வருந்துபவர்கள், மந்தரமலை போன்ற அழகிய தோள்களையுடைய அரங்கன் திருவடியே முத்திக் கரைசேர்க்கும் மரக்கலம் என்பது, இப் பாட்டின் பொருளாகும். பிறவியைக் கடலாக உருவகம் செய்யப்பட்ட இப் பாடல்,

"அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்த லரிது" (திருக்குறள் : அ)

என்னும் திருக்குறளுக்கு விரிவுரை போன்றமைந்துளது.

இங்கே பிறவாழி என்பதைப் பிறவு, ஆழிஎனப் பிரிக்க. இனி, அகப்பொருட்டுறை அமையப் பாடப்பட்ட செய்யுட்களி லொன்றைக் காண்பாம்.

அடியவர்கள் தங்களைத் தலைவியராகவும், இறைவனைத் தலைவனாகவும் கொண்டு பாடலியற்றுதலியல்பு.

இங்கே ஐயங்காரவர்கள் திருமாலின் அழகிலீடுபட்டுத் தம் மைத் தலைவியாக வைத்துப் பாடப்பட்ட பாடலைக் கீழே தரு கின்றேன்.

"வாராக! வாமன னே!யரங் கா!வட்ட நேமிவல
வாராக வா!உன் வடிவுகண் டால்மன் மதனுமட
வாராக வாதரஞ் செய்வனென் றுலுய்யும் வண்ணமெங்கே!
வாராக வாச முலையேனைப் போலுள்ள மாதருக்கே."

னின்னழகைக் கண்டால் மன்மதனும் பெண்களாக ஆவதற்கு ஆசைப்படுவானென்றால், என்போன்றுள்ள மகளிர்க்குப் பிழைத்திருக்கும் வகை யெவ்வாறு என்று கூறுவது எத்துணை அழகாக இருக்கிறது. வேறு எவ்வகையில் இதைவிடத் திரு மாலினழகை வருணித்துக் கூறமுடியும்.

கேமசரி என்பாளோடு சீவகன் சிலநாளின்புற்றிருந்து பின்னர்ப் பிரிந்து போய்விட்டான். அதுபோது பலவாறு கேமசரி அழுது புலம்பினாள். அதைத் தேவர் கூறும்போது,

"புண்ணவாம் புலவு வாட்கைப் பொலன்கழல் புனைந்த பைந்தார்க்
கண்ணவாம் வனப்பி னானைக் காமனே கண்ட போதும்
பண்ணவாம் பவளச் செவ்வாய்ப் படாமுலைப் பரவை யல்குல்
பெண்ணவாய் நிற்கு மென்றால் பிணையனாட் குய்த லுண்டோ"

என்று கூறுவது நினைவுக்கு வருகிறது.

இவ்வாறு சிறந்த கருத்துக்கள் அமையப்பெற்றுத் தன்னைக் கற்போரை நிறைந்த புலமையுடையவராக்கவல்ல இதுபோன்ற சிறு நூல்களையும் அன்பர்கள் பயிலவேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

---

## இறைமாட்சி

இறை என்னுஞ் சொல், தங்குதல் என்னும் பொருளது. இச்சொல் உலகைப் படைத்துக் காத்துக் கரந்து விளையாடும் கடவுளையும் அரசனை யும் குறிக்கும். இறைவன் அருளின்றேல், ஒரு உயிரால் இயங்க வொண்ணாது. மணிமொழிப்பெருமான், இறைவனை வணங்குதற்குங் கூட அவன் அருள்வேண்டுமெனக் குறித்தருள்கின்றார். இதனை 'அவனரு ளாலே அவன்றாள் வணங்கி' என்பது அவர் திருமொழி.

'வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவன்'

என்னும் அப்பரடிகளின் அருண்மொழியும் இறையின் பெருமாண்பினைக் காட்டும்.

இக்கால அறிஞர், தாந்தோன்றியாகத் தம்மால் எல்லாம் செய்ய ஒல்லும் எனத் தருக்குறுகின்றனர். அவ்வாறாயின் நீருணவின்றி, நெல் புல் உணவின்றி வாழுதல் ஒல்லுமோ? நோய் நொடியின்றி இருத்தல் கூடுமோ? கூடாதாயின் ஓர் தலைவன் உண்டன்றேயென உணர்தல் வேண்டுமன்றோ? கட்புலனாகாத ஒலிக்கு, எழுத்து வடிவாகக் கோடல் போல, உரையுணர்வெல்லாம் கடந்து நிற்கும் இறையை நுண்ணுணர்வு கொண்டே அறிதல்வேண்டும். அவ்வுணர்வால் இறைமாட்சி புலனாம்.

சேல்லூர்க்கிழார்.

---

# பயனில் மூப்பு

[வித்துவான், திரு. ஆ. சிவலிங்கனுர், மயிலம்.]

“ பல்சான் றீரே பல்சான் றீரே
கயல்முள் ளன்ன நரைமுதிர் திரைகவுள்
**பயனில் மூப்பிற்** பல்சான் றீரே
கணிச்சிக் கூர்ம்படைக் கையுடை யொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ
நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்
எல்லாரும் உவப்பது அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமா றதுவே ” (புறம். ௧௯௫.)

இப்புறப்பாடல் நரிவெரூஉத்தலையார் என்ற புலவரால் பாடப்பட்டது. கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறை என்ற சேர அரசனைச் சார்ந்த சான்றோர் அவ்வரசனை நல்லறிவு கொளுத்தி அறநெறிப்படுத்தாது மறநெறியிற் புகுத்தி அவனுக்கும் மக்களுக்கும் தீங்கினைச் செய்துவந்தமையின் அவர்களை நோக்கி நம் புலவர் மேற்பாடலைப் பாடினார் என்பர் அறிஞர்.

“பலவான குணங்களால் அமைந்தோரே! நுங்களை எமன் தன் பாசத்தால் பிணிக்குங் காலத்தில் மிக இரங்குவீர்கள். நுங்களால் பிறர்க்கு நல்லது செய்ய இயலாதாயினும் தீங்கு செய்தலையாவது தவிர்மின். அது, யாவராலும் விரும்பப்படுவதாகும். அன்றியும் அது நல்லதைச் செய்து நன்னெறியடைதற்குரிய வழியுமாகும்,” என்பது அப்பாடலின் கருத்து.

இப்பாடலில் சான்றோரை விளிக்குமிடத்துப் ‘பயனில் மூப்பிற் பல்சான்றீரே’ என விளித்தார் புலவர். சான்றோரின் மூப்பு பயனில் மூப்பு என்பது புலவர் எண்ணம். அவ்வெண்ணத்திற்குக் காரணம் என்ன? பயனில் மூப்பு என்றதற்கு, “வாழ்நாள் நன்னெறிக்கண் கழியாமையின் பயனில் மூப்பு என்றார்,” என ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் விளக்கம் கூறினர். அதுவே காரணமாக இருக்கலாம். சிறந்த விளக்கம். அவ்விளக்கத்தைக் கொண்டே பயனில் மூப்பு என்றதன் கருத்தை இன்னும் சற்று ஆழ்ந்து நோக்கலாம்.

பயனில் மூப்பு என்ற அளவில் பயனுடை மூப்பும் உண்டென உணரலாம். மூப்பின் பயன் யாது? வாழ்நாள் நன்னெறிக்கண் கழிவதென்றால் என்ன? ஒருவன் தன் வாழ்நாளில் தீயன நீக்கி நல்லனகொண்டு ஒழுகிவருவானாயின் அவன் வாழ்நாள் நன்னெறிக்கண் கழிந்தது என்னலாம். நன்னெறிக்

கண் ஒழுகலாவது தனக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கும் நினைவு, சொல், செயல்களை மேற்கொள்ளுதலாம். ஒருவன் தன் அறிவினால் நன்னெறியிலேயே இளமையிலிருந்து முதுமை வரையிலும் நடக்க, மற்றொருவன் தன் இளமையில் தீநெறி பற்றிச் சென்று பலவகையான இன்னல்கட்குட்பட்டு வயது முதிர முதிரத் தான் சென்ற நெறியின் தீங்கினையுணர்ந்து தன் முதுமையில் நன்னெறிச் செல்கின்றான். இவ்விருவரின் முதுமைக்கும் வேற்றுமை யாது? பின்னவனது இளமைக்காலம் நன்னெறிக்கண் செல்லாமையினால் அவன் முதுமை, பயனில் முதுமையாகுமா? அல்லது முன்னவன் முதுமையைப் பயனுடை முதுமை என்றால், அவன் இளமையும் பயனுடையதாயினமையின் முதுமையை மட்டும் பயனுடையதென்பதில் யாதொரு சிறப்பும் இல்லை. அதனால் நம் புலவர் பயனில் மூப்பு என்று கூறியதை உற்றுநோக்குகையில், இளமைக் காலத்தைவிட முதுமைக் காலத்தில் ஒரு தனிப்பட்ட பயன் ஏற்படவேண்டும் என்பது பெறப்படும். அப்பயன்தான் யாது?

அதுதான் நுண்ணறிவு—பகுத்தறிவின் முடிபு—அதாவது அநுபவம். அநுபவம் என்பது வாழ்க்கையில் தான் செய்த நற்செயல் தீச்செயல்கட்கேற்ற இன்ப துன்பங்களைத் துய்த்துக் கண்ட முடிபாகும். அம்முடிபு இளமையிலேயே வந்துவிடாது; வரினும் நிலையாது. அம்முடிபால்—அவ்வநுபவத்தால் அடைவதென்ன? உயிர்க்கு உறுதியைத் தேடுதலேயாம். உயிர்க்கு உறுதியைத்தேடும் எண்ணம் இறையருள் பெற்ற ஞானசம்பந்தர் போன்றார்க்கே இளமையிலேயே—ஏன்?—குழந்தைப் பருவத்திலேயே தோன்றும்; மற்றையோர்க்கு முதுமையில் தான் தோன்றும். ஏன்? 'இளமையில் இயற்றியன யாவும்—அநுபவித்தன யாவும்—தனக்கு என்ன பயனைத் தந்தன? அவற்றால் தன் உயிர் எய்தப்போம் நன்மை யென்ன?' என்று தீர எண்ணிப்பார்க்கும் காலம் முதுமைக் காலமேயன்றோ? எனவே, முதுமையுற்றோர் தம் உயிர்க்கு உறுதிதரும் காரியத்தில் ஈடுபடுதல் வேண்டும் என நாம் உணர்தல் வேண்டும்.

முதுமையுற்றோர் யாவரும் அநுபவம் உடையவராவர். அவர் அவ்வநுபவத்தைக்கொண்டு தாம் நன்னெறியடைதற்குரிய தவம் முதலியவற்றை மேற்கொள்ள வேண்டுவதோடன்றிப் பிறரையும் நல்வழிப்படுத்த முற்படவேண்டும்—முற்படுவர். அவர் சொற்கள் மற்றவர்க்கு உறுதுணையாகும். பயனளிப்பனவாகும். அதனாலன்றோ 'மூத்தோர் சொல் வார்த்தை யமிர்தம்' என்ற வாக்கும் தோன்றியது. பிறரை நல்வழிப்படுத்தாது தீவழிப்படுத்தும் மூத்தோர் மூத்தோராயினும் அவர் மூப்பு பய

னற்ற மூப்பேயாகும். ஏன்? அவர் மூப்பிற்கு அனுபவம் என்பது இல்லையாதலின்.

சேர அரசனிடம் இருந்த சான்றோர் அவனை நல்வழிப் படுத்தாமல் அல்வழிப்படுத்திய காரணத்தால் அவர் மூத்தோராயினும் அவரைப்பற்றிப் 'பயனில் மூப்பிற் சான்றோர்,' என்றார் நம் புலவர். பிறரை நல்வழிப்படுத்துவது சான்றோர் கடன். சான்றோர் தாமும் வயதில் மூத்தோராகவும் இருக்கவே அவர் அரசனை அல்வழிப்படுத்தல் மிகவும் தவறு. அவ்வாறு அச் சான்றோர் நடவாமையின் அவர் மூத்தும் பயன் இல்லை என்பார் அவர் மூப்பின்மேல் ஏற்றிப் 'பயனில் மூப்பு' என்றார்.

திருநெல்வேலியைச் சார்ந்த வீரவநல்லூரில் ஆவணப் பதிவாளராக இருந்த உயர்திரு. T. K. அறம்வளர்த்தநாத பிள்ளை B.A. அவர்கள், அவ்வூர் நடுநிலைப்பள்ளியில் (1941-ல்) தமிழாசிரியனாக இருந்த யான் தம்மை முதலில் கண்ட காலத்தில், "தம்பீ! நீங்கள் சிறுவராக இருக்கிறீர்கள்; தமிழ் படித்திருக்கிறீர்கள்; மகிழ்ச்சி; யாவராயிருந்தாலும் உங்களைவிட வயதில் மூத்தவர்களானால் அவர்கள் ஏதேனும் சொல்லும்போது உடனே மறுத்துச்சொல்லிப் பொருட்படுத்தாமல் இருப்பதைவிட்டு அமைதியாகக் கேளுங்கள். ஏன் எனின் அவர்கள் தங்கள் அனுபவத்தைச் சொல்வார்கள். நமக்கு வேண்டிய சிறந்த அறவுரையாகவும் இருக்கும். இதுதான் யான் உங்கட்குச் சொல்ல நினைத்தது" என்றார்கள். உண்மைதானே! பள்ளிப்படிப்பில் சிறந்திருக்கலாம் ஒருவன்; ஆனால் அவன் உலக அனுபவத்தில் சிறந்திருக்கமுடியாதல்லவா? இதனாலும் முதுமையின் பயன் அனுபவ அறிவினைப் பெற்றிருப்பதே என்னலாம்.

இளையரைக் காட்டினும் முதியவர்தாம் நன்னெறியில் உயிர்க்கு உறுதிபயக்கும் வகையில் ஒழுகல்வேண்டும். இளையவன் தவறு மன்னிக்கப்படும். ஆனால் முதியவன் தவறு மன்னிக்கப்படாது. வயதில் இளையவன் தன்னைத் திட்டினான் என்று வயதில் முதியவன் அவனை யடிப்பானேயானால் அவ்வழிச் செல்லும் பெரியோர், "என்னப்பா....அவன்தான் சிறு பையன் திட்டினான் என்றால் நீயுமா அவனை யடிப்பது?" என்று முதியவனையே அடக்கிச் செல்வர் அன்றோ?

தினைப்புனத்தில் வள்ளிக்கு உறுதியான துணையாவன் என இருத்தப்பட்ட முருகக்கிழவன், அவளையே விரும்பித் தழுவச் சென்ற காலத்தில் வள்ளி அவன் யார் என்பதை யறியாது ஒரு கிழவன் என்ற எண்ணத்தால் பலவாறு இழித்துப் பேசினாள்.

நத்துப் புரைமுடியீர் நல்லுணர்வு சற்றுமிலீர்
**எத்துக்கு மூத்தீர்** இழிகுலத்தேன் தன்னை வெஃகிப்
பித்துக்கொண் டார்போல் பிதற்றுகின்றீர் இவ்வேடர்
கொத்துக் கெலாமோர் கொடும்பழியைச் செய்தீரே.

இவ்வள்ளியின் கூற்றில் 'எத்துக்கு மூத்தீர்' என்றது மிகவும் கவனிக்கத்தக்கது. ஏன்? முதுமைக்கு அறிவும் அனுபவமும் உண்டு; நல்லுணர்ச்சியுண்டு; இளமையில் அவை இயல்பாகவே பண்டையூழ் வயத்தானன்றிப் பெறல் அரிது; அவற்றைப் பெற, பல இன்னல்கள் பட்டே தீரவேண்டும். எனவே வள்ளி, "ஐயா! நீர் நல்லுணர்வு இலராயினீர்; அதனால் என்னை விரும்பினீர்; நீர் கிழவர்; மூத்தவர்; இளையராயிருப்பின் நும் பருவத்திற் குறையுண்டென்னலாம். ஆனால் மூத்த பருவத்தில் குறைகூறுதற்கிடம் இராதே, சிறந்த நல்லுணர்வு 'பெற்றிருக்க வேண்டுமே; அவ்வாறில்லாமையால் எதற்கையா முதுமை யுற்றீர்," என்றாள் வள்ளி. இவ்வள்ளியின் கூற்றும் முது மைக்கு நல்லுணர்வு நல்ல அனுபவமுடிவு இருக்கவேண்டும் என் பதை அறிவிக்கின்றது.

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன் குலவித்தை
கல்லாமல் பாகம் படும்.

இது பழமொழி(௬)ப் பாட்டு. சோழன் கரிகாலன் மிக இளைய னாய காலத்தே அரசனானான். அப்போது நரைத்து முதிர்ந்த பெரியவர் சிலர் தம்முள் ஏதோ ஒரு வழக்கினை மேற்கொண்டு அரசனிடம் வந்தும், அரசன் மிக இளையனாயிற்றே; முறை செய்வனோ என்று ஐயுற, அதனையறிந்த அரசன் தான் நரை முடித்துக்கொண்டு முதியவனாகத் தன்னைக் காட்டி அவர்கள் மனம் அமைதிகொண்ட பிறகு முறைசெய்து அனுப்பினான். இவ்வரலாற்றினை உணர்த்துகிறது இப்பழமொழிப் பாடல்.

கரிகாலன் இளையன் ஆதலின் உரைமுடிவு காணான் என்ற னர் நரை முதுமக்கள். ஏன்? அனுபவம் இராதன்றோ? கரி காலனும் முதுமக்கள் உவக்கும்படி நரைமுடித்து முறை செய் தான் என்றால் 'முறை செய்தற்கு அனுபவம் மிக்க முதுமை ஏற்றதேயாம்' என்னும் கொள்கையை உடன்பட்டான் என்று தெரிகின்றதல்லவா? இப்பாடலின் ஈற்றடி இயம்புவதென்ன? 'குலவித்தை கல்லாமல் பாகம் படும்' என்கின்றது. கரிகாலன் இளையனாயிருந்தும் முறைசெய்தான் என்றால் அதற்கு, அவன் குலம் முறை வழங்கும் அரசகுலமாகியதே காரணம். அரச வழி வாராமல் பிறவழி வந்த ஒருவன் இளமையில் அரசனாயின் முறைசெய்ய இயலாதுதான். யாதோர் அனுபவமும் அவனுக்

கிராதன்றே? எனவே, இப்பழமொழிப் பாடல் அரசியலிலும் அனுபவமுறையில் நீதிவழங்க முதுமையே ஏற்றதாம் என்பதை அறிவிக்கின்றது. இதனால் முதுமைக்கே அனுபவம் இருக்கும் என நாம் உணரலாம்.

கண்ணகிக்குக் கல்லெடுப்பதை முன்னிட்டு இமயம்சென்று ஆரியமன்னரை வென்று தமிழரது ஆற்றலை யறியாது இகழ்ந்த கனகவிசயரது தலையில் கல்லை யேற்றிவந்த சேரன் செங்குட்டுவன், தன் ஆற்றலைத் தன்போன்ற சோழ பாண்டியர்க்குக் காட்ட எண்ணி, நீலன் என்பவனைக் கனக விசயரைக் காட்டி வரும்படி அனுப்பினன். நீலனும் சென்று மீண்டவன் அவ்விரு வேந்தரும் சேரன் வெற்றியை இகழ்ந்துரைத்ததாகக் கூறவே சீற்றம் கொண்டனன் செங்குட்டுவன். அருகிருந்த மாடலன் என்ற மறையவன், உண்மையொடு பட்ட புகழ்மொழிகளால் சினத்தைத் தணியச் செய்து,

> "அகழ்கடல் ஞாலம் ஆள்வோய் வாழி
> இகழா தென்சொல் கேட்டல் வேண்டும்
> வையம் காவல் பூண்டநின் **நல்யாண்டு**
> **ஐயைந் திரட்டி** சென்றதற் பின்னும்
> அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
> மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை" (சிலப். உ௮. கஉ௭-கஙஉ)

என்றுரைத்து, யாக்கை செல்வங்களின் நிலையாமைகளையும் "நரைமுதிர் யாக்கை நீயும் கண்டனை," என்னு முகத்தால் இளமை நிலையாமையையும் பிறவற்றையும் எடுத்துக் கூறி அவனை அறக்களவேள்வி செய்யுமாறு அறிவுறுத்தினன். "நல்யாண்டு ஐயைந்திரட்டி சென்றதற் பின்னும்," என 50 யாண்டுகள் கழிந்ததைச் சுட்டிக்காட்டி அரசனை அறம்செய்யத் தூண்டியதை நாம் கூர்ந்து நோக்குதல்வேண்டும். 50 யாண்டுகளாகச் சேரன் செய்துவந்த மறக்களவேள்விகள் அவன் உயிர்க்கு என்ன பயனையளித்தன. அவற்றால் இம்மையில், 'சிறந்த அரசன்' என்ற புகழ்தவிர மறுமையில் அவன் அடைவது யாது? மறுமைக்கு வேண்டியதை இம்மையிலேயே செய்து கொள்ள வேண்டுமன்றோ? அதனால் மாடலன் அவனை அவ்வாறு அறிவுறுத்தினன். மாடலன் கூற்றுப்படி வயதில் முதிர்ந்தவர், தாம், இளமையில் இருந்தவாறே நடவாமல் உயிர்க்கு உறுதிபயக்கும் காரியத்தில் ஈடுபடவேண்டும் என நாம் அறிதல் வேண்டும். அதுவே முதுமையுற்றதின் பயன் என்றும் முடிவு கட்டல்வேண்டும்.

தன் தலையில் ஒரு நரையினைக் கண்டுவிட்ட தசரதன் தனக்கு மூப்புவந்ததை யுணர்ந்தான். உணர்ந்தவன், 'இனி

நாம் அரசாள்வது தகுதியன்று ; பழிப்பிற்கிடமாகும் ; தக்கவனை நம் மகன் இராமனுக்கு முடிசூட்டித் தவத்தினையே மேற்கொள்ளவேண்டும்,' என முடிவுகொண்டு மந்திரச் சுற்றத்தினை அழைத்துத் தன் கருத்தினைத் தெரிவிக்கும் காலத்தில்,

" மன்னுயிர்க் குறுவதே செய்து வைகினேன்
என்னுயிர்க் குறுவதும் செய்ய எண்ணினேன் "

எனக் கூறி, "விரும்பிய மூப்பு எனும் வீடு கண்ட யான் " எனத் தன்னைக் கூறிக்கொண்டு மேல் விரிவாகத் தன் கருத்தினை விளக்கினான். அவன் தன் மூப்பினை, 'விரும்பிய மூப்பு' என்றது நோக்கத்தக்கது. மூப்பினை யாரும் விரும்பமாட்டார்கள். ஆனால் அவன் விரும்பினானும். ஏன்? தன் ஆட்சிக் காலத்தில்—இளமைக் காலத்தில் மன்னுயிர்க்குறுவதே செய்து வைகினான் ; அதனால் புகழ்பெற்றான். முடிவான பயன்? உயிர்க்குத் தான் தேடிக்கொண்டதென்ன? இனித் தான் தேட எண்ணினான். தேடுதற்கு அமைதி வேண்டும். அமைதியான இடமும் வேண்டும். வெளியில் அலைந்து அலுவல் பார்த்த ஒருவன் ஓய்வெடுக்க வீடு வருகின்றான். வீடு அவனுக்கு ஓய்வெடுக்க இடம் ஆகிறது. தன் வாழ்நாள் எல்லாம் அரசியலில் உழைத்த தசரதனுக்கு ஓய்வெடுத்தற்கேற்ற இடம் எது? முதுமையே. அதனால் அதனையே வீடு என்றான். மூப்பால் அமைதி—ஓய்வு கொண்டு உயிர்க்கு உறுதிதேட எண்ணினான் ஆதலின், அதற்கு ஏற்ற பருவமான மூப்பினை 'விரும்பிய மூப்பு' என்றான். மூப்பினை விரும்பியதால் அவன் நினைத்ததென்ன? "நிரம்ப மூப்படைந்த பின்னரும் துறந்திலன்," என உலகம் பழிக்காதிருக்கத் துறக்க நினைத்தான்; தசரதன் எண்ணம் தூய்மையானது; அவன் மூப்பும் பயன் உடையதாயிற்று.

இதுவரை கூறியவற்றால் முதுமைக்கு அனுபவம் என்ற ஒன்று உண்டென்றும் அவ்வனுபவம் அடைந்ததற்கேற்ப உயிர்க்கு உறுதியைத் தேடிக்கொள்ளவேண்டும் என்றும் அறியலாம். கருவூர் ஏறிய ஒள்வாட் கோப்பெருஞ்சேரல் இரும்பொறையின் அவைக்களச் சான்றோர் தாம் நரைமுதிர் மூப்புடையராயிருந்தும் முதுமைக்கேற்ற அனுபவம் இன்றி அரசனை மறவழிச் செலுத்தி அவனுக்கும் மக்களுக்கும் தீங்கினையே விளைவித்தமையால் அவர்கள் மூப்பு, பயனில் மூப்பாயிற்று. அதனால் "பயனில் மூப்பிற் பல் சான்றீரே" என இகழ்ந்தார் நரி வெரூஉத் தலையார். இளமைக் காலம் எவ்வாறு செல்லினும் முதுமைக் காலம் உயிர்க்குறுதி தேடுவதில் செல்லுமேயானால் அம் முதுமை பயனுடை முதுமையாகும். இல்லையென்றால் அது பயனில் மூப்பேயாகும்.

---

# நாற்கவிராயர், சு. நல்லசிவன் பிள்ளை அவர்கள்

[பெருநாவலர், திரு. பு. சி. புன்னைவனநாத முதலியார்]

என்றுமுள தென்றமிழ் சிறக்கும் கன்னிநாடாம் பாண்டி நன்னாட்டில், "திருநெல்வேலி என்னும் திருப்பதியைச் சார்ந்த சம்புலிங்கபுரம் என்னும் கிராமத்திலே சிவபத்தி அடியார் பத்தி களாற் சிறந்த திருவாளர். சுப்பிரமணிய பிள்ளை என்பார் ஒருவர் இருந்தார். அவர் நப்பின்னைகேள்வர் நாராயணமூர்த்திபோல் உயிர் ஓம்பு நீரர். அவர்செய் நற்றவத்தால் அவருக்குச் சண் முகத்தம்மையார் வயிற்றில் ஓர் பிள்ளையார் கொல்லம் 1057 சித்திரபானு வைகாசித்திங்கள் 27 (8-6-1882) வியாழக்கிழமை சதய நன்னாளில் பிறந்தார். அவருக்கு நல்லசிவன் என்னும் பெயர் சூட்டப்பட்டது. அவர் நன்மாதுலர் திரு. திருவண்ண நாதக் கவிராயர், திரு. திரவியசங்கரநாராயணக் கவிராயர் ஆகிய இருவரும் தம் மருகர் நல்லசிவனார்க்கு உரிய காலத்திலே கல்வி கற்பித்து வந்தார்கள். அவர்கள் கல்வி நலன் நன்குணர்ந்த கவி ராயராகலான், மருகனார் பருவங்கட்கும் அவற்றிற்கேற்ற அறி விற்கும் உரிய நன்னூல்களை நயந்து கற்பிக்க, நல்லசிவனார் இயற்கையறிவுச் சிறப்புடன், செயற்கையறிவுச் சிறப்பும் உடங் கியைந்தோங்கலின், நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய்க் கலைகள் நிரம்பக்கற்று, "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக" என்னும் ஒத்தின் வண்ணம் நிற்கும் நிலையினராயினார். இவ ருடன்பிறப்பாளர் இருவர் இளம் பருவத்தே காலமாயினர்.. தனித்த நல்லசிவனார் தம் கல்வியின் பயனைப் பிறர்க்குதவும் பண்பில் பதுமநாபமங்கலம், கூட்டுடன் காடு, தெய்வச்சிலையாபுரம் என்ற ஊர்களில் தமிழாசிரியராக வேலைபார்த்தனர். கொல்லம் 1083 பிலவங்க வருடம் 1907-ல் தம் மாதுலர் மகள் சொர்ணத்தம்மையாரை மணம்புரிந்தனர்.

இவர் அறிவின் மதுகையை டாக்டர். P. K. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் வாயிலாக நன்குணரநின்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்து நிரந்தரத் தலைவராக இருந்த மாட்சிமை பொருந்திய இராசராசேசுவர முத்துராமலிங்க சேதுபதி அவர்களும், சங்கக் கௌரவக் காரியதரிசியாக விளங்கிய திரு. T. C. சீனிவாசய்யங் கார், பி. ஏ., பி. எல்., அவர்களும், தமிழ்ச் சங்கத்தில் எழுத் தாளராக நியமித்துப் பின் சங்கக் கலாசாலையில் ஆசிரியராகவும் வேலைபார்க்கச் செய்தனர். தலைவர் கண்டு களிப்புறத் தமக்கு என உரிய கடப்பாடுகளைச் சிறிதுந்தவறுமல் உரிய காலங்களில் நடத்திவருவாராயினர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் நம் பிள்ளையவர்கள் வேலை பார்த்துவருங் காலத்தே முகவை. இராமசாமிக் கவிராயர் அவர்கள் மும்மணிகளில் மூத்தவரான திரு. அருணசலக் கவிராயர் அவர்களும், அவர்க்கடுத்த இளவலான சேற்றூர். சுப்பிரமணியக் கவிராயர் அவர்களும் நூற்பரிசோதகர்களாக வேலைபார்த்து வந்துளார்கள். கலாசாலைத் தலைமையாசிரியராக, திரு. திருநாராயணையங்கார் அவர்களும் வேறும் சில கவிவல புலவர்களும் பணியாற்றி வந்துளார். புலமை நுட்பமும் கவிச் சிறப்பும் வாய்க்கப்பெற்ற அவர்கள் இருப்பினும், நம் பிள்ளையவர்கள் சங்க ஆண்டுவிழா வரவேற்புப் பாக்கள், வாழ்த்துப் பாக்கள் எல்லாம் பாடும் தனிப் பண்புடையவராயினர். திரு. T. C. சீனிவாசய்யங்காரவர்கள் ஒருநாட் காலை 7 மணிக்கு நம் பிள்ளையவர்களைக் கூப்பிட்டு, இன்று 12 மணி இரயிலில் வடக்கிருந்து அறிவியற் புலவரிற் சிறந்த செகதீச சந்திரபோசு என்பவர் வருகின்றார். அவரைச் சங்கத்தில் வரவேற்றுச் சிறப்புரை யளிக்க விரும்புகிறோம். வரவேற்பு வாழ்த்து அமைத்துக் கொடுக்கவேண்டும் என்றனர். ஆங்கில நூற் பயிற்சியில்லாதிருப்பினும் பயிற்சியுற்றவர் இன்ன இன்ன பொருள்கள் இன்னவின்ன நிலைமையிலுள்ளன என்பன போன்ற குறிப்புக்கள் மட்டும் கொடுத்தாற்போதும். அக் குறிப்புக்களைக் கொண்டே, அம் மொழி மேதாவியும் பார்த்து வியப்புறும் வண்ணம் அழகுபெறச் செய்யுள் அமைத்துதவும் வல்விரைவினர். இப்படிச் செய்யப்பட்டுப் போசுக்கு அளிக்கப்பட்டது. ஆகவே சங்க வாழ்த்துக்கள் வரவேற்புப் பாக்கள் எல்லாம் நம் பிள்ளையவர்கள் பணியாகவே திகழ்ந்தன.

இவர்கள் கவிகள் செம்பாகமான சொற்களால் இயன்றவை. எவரும் படித்து இன்புறத்தக்க எளிய தொடையின. பொருளாழமும் போதியபடியுண்டு. 19, 20-வது நூற்றுண்டில் தமிழ்ப் புலவர்கள் என்று சிறந்து பெயர்வாங்கி உயிரனைய நூல்கள் பல இயற்றியுமிருப்பரேல் அவர்கள் எல்லாரும் நம் பிள்ளையவர்களின் கவியமுதம் பெற்றுச் சுவையாதிரார். நம் சென்னை மாநிலத்தில் மகாமகோபாத்தியாயப் பட்டம் பெற்றுச் சிறப்புற்ற உ. வே. சாமிநாதையர், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார் முதலிய பேரறிஞர்களெல்லாரும் நம்பிள்ளையைப் பார்த்துச் சிறப்புக் கவிகள் பெற்றும் அவர்கள் கவிநயத்தைப் பாராட்டியும் மகிழ்வடைந்துளார். நம் தாட்சிணாத்ய கலாநிதி. டாக்டர். உ. வே. சாமிநாதையர் அவர்கள், ஒரு பத்தாண்டு கட்குமுன் திருப்பனந்தாள் காசிமடத்து, 19-ம் பட்டத்துத் தலைவர்களாக வீற்றிருந்த அருங்கலை விநோதரும், ஆயிரம் ரூபாய்த் தமிழ்ப் பரிசு முதலிய எண்ணிறந்த பரிசுகள் வழங்கித்

தமிழ்மொழி வளர்ச்சிக்கு உதவிவந்தவர்களுமான அருட்டிரு. காசிவாசி. சாமிநாத சாமிகள் அவர்களிடம் தமிழ்க் கோவை முதலிய பிரபந்தங்களைப்பற்றி உரையாடிக்கொண்டிருக்கையில், மடத்துத் தலைவர் அவர்கள், மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் சைவ வேளாண் மரபினருள் புலமை வாய்ந்தவர் எவரேனும் இருப்பின், அவரால் தங்கள் ஆத்மார்த்த மூர்த்தியாகிய மதுரைச் சொக்கநாதர் மீது ஒரு வருக்கக் கோவை இயற்றுவிக்கச் செய்தால், அதற்கு உரிய பரிசு வழங்குவதுடன், நூலை மடத்து வெளியீடாக வெளியிடவுங் கூடும் என்று தங்கள் கருத்தைத் தெரிவிக்க, ஐயரவர்கள் பிள்ளையவர்களிடம் கூறினார்கள்.

அங்ஙனமே 'மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவை' என்னும் பெயருடன் பாடி முடித்துப் பனசைத் திருமடத்து 19-ம் பட்டத்துத் தலைவரவர்களை நேரில் தரிசித்து நூலைச் சமர்ப்பித்தார்கள். அவர்கள் நூலைப் பார்வையிட்டு அதற்குரிய பரிசும் வழங்கினார்கள். 20-வது பட்டத்துத் தலைவர்களாக எழுந்தருளியிருக்கின்றவர்களும் தமிழுக்கும் சமயத்துக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் வேண்டும் அறக் கட்டளைகள் இலட்சக் கணக்காக இயற்றி வருகின்றவர்களும், கண்டவர் கேட்டவர் யாவரும் போற்றிப் புகழும்படியான ஒழுக்க நிலையுயர்வுடையவர்களுமாகிய அருட்டிரு. காசிவாசி. அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் திருமுன் 1947-ல் பிள்ளையும் நானும் சென்று விண்ணப்பித்தனம். அவர்கள் கால விளம்பனமின்றி உடனே நூறு வெண் பொற்காசுகளை அருளி நூலை வெளியிட ஆணை தந்தார்கள். அங்ஙனமே, 'மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவை' 1948 சனவரியில் வெளிவந்துள்ளது. பிள்ளையவர்கள் பாளையங்கோட்டையில் சில ஆண்டுகளாகக் குடியிருந்து வந்தார்கள். வந்தநாள் முதல் வயிற்றுேட்டத்தால் உடல்வலி குன்றினர். 1127 கர வருடம் பங்குனித் திங்கள் 13 (26-3-1952) புதன் கிழமை இரவு 10 மணிக்கு இறைவன் இணையடி நீழலடைந்தார்கள்.

தம் மனைவியார் உடன்பிறப்பினள் புதல்வன் சேதுராமலிங்கம் என்பவனைத் தன் அன்புமகனுகக் கொண்டனர். அவனுக்கு ஈராண்டுகட்குமுன் திருமணமும் முடித்துவைத்தார்கள். அவர்கள் நல்ல மனம்போல் அவர்கள் குடும்பம் பல்கித் தழைத்துச் சிறக்க இறைவன் திருவருளை இறைஞ்சுகின்றனன். அவர்கள் ஆவி ஆண்டவனடியில் இன்புறுமாக.

# மதிப்புரை

## தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி

[இதன் ஆசிரியர் திரு. கி. பே. சீ. வ. பிரகாசம் அவர்கள், ஆட்சியாளர் பாலகுரு வித்தியாலயம், விருதுநகர். இதன்விலை ரூபா. 1-8-0 கிடைக்குமிடம்—குறித்த வித்தியாலயம்.]

இந்நூல் பண்டைக் கணக்காயன்மார் தமிழ்மொழியைத் தொடக்க மாணாக்கர்களுக்கு எளிமையும் இனிமையும் எழுச்சியும் பயக்குமாறு கற்பிக்கக் கைக்கொண்டொழுகிய நம் நாட்டுமுறைமையே சாலச்சிறந்தது என்பதை நன்கு வலியுறுத்துகின்றது. ஆசிரியர் இங்ஙனம் வலியுறுத்துவது நூலுணர்ச்சியால்மட்டும் அன்று; தாம் மேல் நோக்கிவரும் கல்லூரியில் பத்தாண்டுக்குமேல் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் எதனை எளிதாகக் கைக்கொள்ளுகின்றனர் என்பதைத் தம் பட்டறிவினால் கண்டு உலகினுக்கு உணர்த்துகின்றனர். மேலைநாட்டுப் பழக்கம் எழுத்துக்குரிய தனியொலியும், சொல்லாகும்போது ஏற்படும் மாறுபட்ட ஒலியும் உள்ள அந்நாட்டு மொழிகளுக்கே பொருந்தும். நம் அருமைத் தாய்மொழி எழுத்து, சொல் முதலிய எவற்றினும் மாறுபாடில்லாத இயற்கையொலியே யாண்டுங் கொண்டு திகழ்வது.

மேலும், தமிழ்மொழியின் அமைப்பு, இயல்பு, மரபு முதலியவற்றை நன்கு விளக்கியும், இலக்கண நுணுக்கங்களை ஆங்காங்கே சீர்பெறக் கட்டங்களமைத்துக் காட்டியுள்ளார்கள், பிழையின்றிப் பேசவும் எழுதவும் பல பயிற்சிப் பாடங்கள் அமைத்துள்ளார்கள். ஐம்பத்தாறு தலைப்புக்கள் கொடுத்து அனைத்தையும் விளக்கியுள்ளார்கள். சுருங்கச் சொல்லின் இந்நூல் பிழையறக்கற்கவும், இலக்கண இலக்கிய மாண்புகள். நுணுக்கங்கள் முதலியன எளிதினுணர்ந்து மொழியறிவும் கலையறிவும் நிரம்பிப் புலவராகவும் பெருந்துணைபுரியும். யாவரும் ஆதரித்துப் பயன்பெறுவார்களாக.

## கிள்ளைவிடு தூது

ஆசிரியர் திரு. T. S. ஸ்ரீபால் அவர்கள். ஆசிரியரவர்கள் சிற்றுயிர்க் கொலையை முற்ற ஒழிக்கக் கடந்த முப்பது ஆண்டுகளாக அரும்பெரும் பாடுபட்டு ஓயா உழைப்பால் நம் மாகாணம் எங்கணும் சென்று விரிவுரையியற்றி வெற்றிகண்டுள்ளார்கள். அவர்கள் தூண்டுதல்மேல் உயிர்ப்பலித் தடைச் சட்டமும் நிறைவேறி நடைமுறைக்கும் வந்துள்ளது. அச்சட்ட விளக்கமும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. பல படங்கள் அழகிய முறையில் விளங்குகின்றன. ஆசிரியரவர்கள் அருண்முறை ஓங்குவதாக.

## (க) திருக்கோவையார் பேராசிரியர் உரையுடன், (உ) தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரையுடன்

இவ்வரும்பெரும் அருள்நூல்கள் திருப்பனந்தாள் திருமடத்து வெளியீடுகளாகும். திருக்கோவையாரின்கண் பேரின்பப் பொருள் பயக்கும் **உண்மையும்** ஒவ்வொரு திருப்பாட்டின் அடியிலும் அமைக்கப் பட்டிருப்பது மிகவும் போற்றத்தக்கது. அழகிய பதிப்பு. திருமடத்தார் செய்யும் திருமுறைத்தொண்டு செந்தமிழ்க்குஞ் சிவநெறிக்கும் காலத்துக் கேற்ற சாலச்சிறந்த உயிர்த்தொண்டாகும் என்பது ஒருதலை. தமிழ்நாடு பயன்பெற்று உய்யுமாக.

# செய்திகளும் குறிப்புக்களும்

## நெல்லை - சித்தாந்த வகுப்பு

சாத்தூர் வழக்கறிஞர், சித்தாந்தப் பெரும்புலவர் **உயர்திரு. தூ. சு. கந்தசாமி முதலியார்** எம்.ஏ. அவர்களை ஆசிரியராகக் கொண்டு திருநெல்வேலிச் சந்திப்பு, தருமபுர மடத்தில் 27-4-52 ஞாயிறு தொடங்கி 20-5-52 வரையுள்ள 24 நாட்களில் (8, 9, 10-5-52) மூன்று விடுமுறை நாட்கள் நீங்கலாகவுள்ள 21 நாட்களும் காலை -மணி 9-30 முதல் 11-30 வரை **சிவஞானபோதச் சிற்றுரைப்** பாடம் நடைபெறும். பிற்பகல் 3-30 முதல் 5 வரை **ஐயத் தெளிவு** நடைபெறும். இரவு 7 மணி முதல் 8-30 வரை சித்தாந்தப் பேரறிஞர்களின் அரிய **விரிவுரை** நிகழும்.

இவ் வகுப்பில் கலந்து பயிற்சிபெற விரும்புவோர் தமிழ் வித்துவான் பட்டம் பெற்றவராகவோ, பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்றவராகவோ இருத்தல் வேண்டும். சமயத்துறையில் சில ஆண்டுகள் பணி செய்தவராக வேனும், அத்துறையில் மேலும் பணியாற்றும் ஆர்வமுள்ளவராகவேனும் இருத்தல் வேண்டும். இத்தகுதிகளைப் பெறாதவர் தமிழ்ப்பணி சமயப் பணிகளில் பல்லாண்டுகள் ஈடுபட்டும், சொற்பொழிவாற்றும் திறம் பெற்றும் இருத்தல் வேண்டும். இதனை வலியுறுத்தத் தக்காரிடம் சான்றிதழ் வாங்கி அனுப்புதல் வேண்டும்.

இவ் வகுப்பில் சேர விரும்புவோர் **'செயலாளர், சைவசித்தாந்த சங்கம், 24, கீழரத வீதி, திருநெல்வேலி'** என்னும் முகவரிக்குக் கடிதம் எழுதி விண்ணப்ப இதழ் பெற்று 10-4-52-க்குள் மேற்குறித்த முகவரிக்கே அனுப்புதல் வேண்டும்.

புலமைப் பட்டம் பெற்றோர் தம் அறிவுச் சிறப்புக்கு இன்றியமையாத நுண்ணுணர்வாம் சமயத்துறைப் பேரறிவும் பெறவேண்டுமென்னும் நோக்கங்கொண்டே இவ் வகுப்பு துவக்கப் பெறுகின்றது.

## *தென் இந்தியமொழியொன்றின் இன்றியமையாமை

காசிப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஆசாரிய நரேந்திரதேவ் கருத்து: தென் இந்தியாவின் மொழி ஏதாவதொன்றையேனும் வட இந்திய மாணவர் கட்டாயம் கற்றல் வேண்டும். இதனால் வட இந்தியாவுக்கும் தென் இந்தியாவுக்கும் இன்னும் நெருங்கிய உறவும் உரமும் உண்டாகும் என்பது உறுதி. தென்இந்திய மொழியைத் தெரிந்துகொண்டு நம் நாட்டுக் கலையொழுக்கத்தை வளம்படுத்தல் வேண்டும்.

---

*தென்இந்திய மொழிகளில் தலைசிறந்ததும் அனைத்துலகுக்கும் தன் விழுமிய தனிநாகரிகத்தை வழங்கியதும், இப்பொழுது நிலவியுள்ள மொழிகட்கெல்லாம் தாய்மொழித்துணையாகத் திகழ்வதும், எளிமையும் இனிமையும் வாய்ந்ததும், தொன்மையாயதும் உண்மை இலக்கண இலக்கியச் செறிவுள்ளதும் அமிழ்தினுமினிய தமிழ்மொழியொன்றே. ஆகவே, அம்மொழியே வட இந்திய மாணவர்கள் கற்றுக் கலைநிரம்ப—கலை யொழுக்கு ஒன்ற வாய்ப்புடைய தென்பது சொல்லாமலே விளங்கும். அதனையே கற்று ஒற்றுமையுறுவது உரமும் உறுதியும் பயக்கும் ஒண் பொருள் என்க.

## திருக்குறளும் அடிகள் விநோபாவாவும்

காந்தியடிகளின் கொள்கை எச்சமாய் அடிகளை நச்சிக் காட்டியவழியே நாட்டுக்கு நற்றொண்டு பூண்டு ஒழுகும் அடிகள் விநோபாவா அவர்கள் 1942-இல், நாகபுரிச் சிறையிலிருந்து வேலூர்ச் சிறைக்கு மாற்றப்பட்டது முதல் தமிழ்கற்கத் தலைப்பட்டார்கள். தமிழ் அவர்கட்கு உயிர்அமிழ்தாய் உணர்வொடு ஒன்றி மறக்கமுடியாததொன்றாய் உளத்து மன்னி ஆட்கொண்டது. அவர்கள் கருத்து இந்நாள் என் உடலை வளர்ப்பது தமிழ் நாட்டு உப்பு; அதுபோல் என் உயிரை வளர்ப்பதும் தமிழ்நாட்டுத் தாய்மொழியாம் தமிழ்மொழியே என்பது. அவர்கட்குத் தமிழின்கண் தனிப் பெரும் பற்று இனித்தமுறையில் இயைந்துள்ளது. தமிழைத் தொன்முது தமிழர்கள்போன்று உரையாடுகின்றார்கள். வேறு எம்மொழிக்குமில்லாது தமிழ்மொழிக்கே சிறந்த சிறப்பு **ழ** கரத்தைச் செவ்வையாக ஒலிக்கின்றார்கள். அவர்கள் இந்த **ழ** கரவொலியே அமிழ்த ஒலி என்கின்றார்கள். உலகினிற் சிறந்ததாய் ஒப்புயர்வற்றதாய்த், தொன்மையதாய்த்திகழும் நன்மைமிக்க **திருக்குறளினிடத்துத்** தனி மதிப்புக்கொண்டுள்ளார்கள். அதுவே தெய்வ மறைநூலென்று காலையும் மாலையும் காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்க ஓதிவரும் கடப்பாடுடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். அடுத்தடுத்துத் திருக்குறளிலிருந்து எல்லாவகையான வாழ்க்கைக்கும் மேற்கோளெடுத்துக் காட்டுகின்றார்கள். அவற்றுள் ஒன்று "உழுதுண்டு வாழ்வாரே" என்பது. திருக்குறள் அறிவுடைமையிலிருந்து சில திருப் பாட்டுக்களை மராட்டியில் மொழிபெயர்த்துள்ளார்கள். பாரதியார்பாடல், திருப்பாவை, திருவாசகம், தாயுமானவர் போன்றார் அரும்பெரும் நூல்களையும் கற்றிருக்கின்றார்கள்.

## காரைக்குடி - அறந்தாங்கி இருப்புப்பாதை

இவ் இருப்புப்பாதை சென்னைமாகாண ஆட்சியாளர் (Governor) திரு. ஸ்ரீபிரகாசா அவர்களால் 29-3-1952-இல் திறந்து வைக்கப்பட்டது. இது 17·07-கல் (மைல்) தொலைவுள்ளது. இதற்கு நாற்பத்திரண்டு நூறாயிரம் வெண்பொன் செலவாயிருக்கிறதாம். இது சிறப்பாக அப் பகுதியினர்க்கும் பொதுவாக எல்லார்க்கும் பெரும்பயன் விளைப்பது. மேலும் தனுக்கோடிக்கும் சென்னைக்கும் நெருங்கிய குறுக்கு வழியாக வுள்ளது. வல்விரைவில் உணவுப்பொருள்கள் செல்லவேண்டிய இக்கட்டான இக்காலத்து அமைந்தது மிகவும் போற்றத்தக்கதும் வரவேற்கத் தக்கதுமாகும். இங்ஙனமே மிகமுட்டுப்பாடான இடங்களுக்கு வல்விரைவில் இருப்புப்பாதைபோடும் முயற்சியை ஆட்சியினர் மேற்கொள்வார்களாக. பெருமக்களும் ஒத்துழைப்பார்களாக.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

# கழகப் புதிய வெளியீடுகள்

**பழந்தமிழாட்சி : ஞா. தேவநேயன், எம். ஏ.**

*பழந்தமிழ்ச் சான்றோர் பல்லாயிர ஆண்டுகளாக அறமுறை திறம்பாது, ஆவியும் கண்ணுமாக ஆருயிரோம்பி ஆட்சிபுரிந்த அரும்பெரும் நுட்பங்கள் பலவும் பிழிவாக இந்நூலில் அடங்கியுள்ளது.*

**அழகிய இருவண்ண மேலட்டையுடன் :** ரூ. 2 4 0

**சந்திர விலாசம் : மாம்பழக் கவிச்சிங்க நாவலர்**

*சந்திர விலாசம் என்னும் இந்நூல் சொற்சுவை, பொருட்சுவை, சிலேடை, அடிமடக்கு முதலிய சொன்னயமும் பொருணயமும் மிக்கது; காதற்கனியைப் பிழிந்தெடுத்த தீஞ்சாறெனத் திகழ்வது; இதற்கேற்ற நல்லுரையை விளக்கத்துடன்* **கழகப்புலவர் செல்லூர்க்கிழார், செ. ரெ இராமசாமி பிள்ளை** *யெழுதியுள்ளனர்; ஆசிரியர் வரலாற்றுடன் விரிந்த நூன்முகவுரையும் கொண்டது; கருவூலங்களில் வைத்துப் போற்றத்தகும் பொற்பு மிக்கது.*

**அழகிய இருவண்ண அட்டையுடன் கூடிய கலிக்காக்கட்டு :** ரூ. 3 8 0

**உயர்தரக் கட்டுரை இலக்கணம் II : ஞா. தேவநேயன் எம். ஏ.**

*கட்டுரை வரைவதற்கேற்ற இலக்கணக் குறிப்புக்கள் பலவும் தெளிவாக விளக்கப்பெற்ற புதிய இலக்கண நூலில் இஃது இரண்டாம் பகுதி. மரபியல், கட்டுரையியல் ஆகிய இருவியல்கள் இதன்கண் விளக்கப்பட்டுள்ளன. மாணவர்க்கேற்ற பயிற்சிகள் பல தரப்பட்டுள்ளன.* ரூ. 2 8 0

**அம்பிகாபதி கோவை : அம்பிகாபதி**

*கற்பனைத்திறன், காவியம், கருத்துவளம் செறிந்து கற்பார் இசயத்தைப் பிணிக்கும் சிறந்த கோவை நூல். புலவர்* **பண்டித மீ. பொன். இராமநாதன் செட்டியா***ரவர்களின் விளக்கஉரைக் குறிப்புக்களுடன் வெளிவந்துள்ளது.*

**அழகிய மூவண்ண அட்டையுடன் கூடிய கலிக்காக்கட்டு :** ரூ. 5 0 0

**வருங்காலத்தலைவர்கட்கு :**

**பன்மொழிப்புலவர், கா. அப்பாத்துரை**

*இது நாட்டுமக்கள் இளம்பருவமுதல் பயிற்சிபெற வேண்டிய ஒழுகலாறுகளைப் படிப்படியாக விரித்து விளக்கும் அரிய பெரிய நூல்: இதன்கண் 'விளையாட்டுவிழாச் செல்வருக்கு' என்னும் தலைப்புமுதல், 'வாழ்வு தொடங்கும் இளைஞருக்கு' என்னும் தலைப்புவரை கூ பகுதிகளாக விரித்தெழுதி ஆங்காங்கே மேல்நாட்டுப் பேரறிஞர்களின் கருத்துக்களோடு வெளிவந்துள்ளது. நாட்டுமக்களும் இளைஞர்களும் கற்று நலம்பெறத் தகுதிவாய்ந்த நூல். அழகிய அட்டையுடன் அண்மையில் வெளிவந்துள்ளது.* ரூ. 1 8 0

பதிவு எண் M. 4899.

# நற்றிணை நானூறு

இந்நூல் சங்கமருவிய எட்டுத்தொகையுள் ஒன்றாகும். இதன் சிறப்புநோக்கிப் பண்டைச் சான்றோர் வரிசை முறையில் இதனை முதற்கண் வைத்துப் போற்றுவா ராயினர்.

இதன்கண் கடவுள் வாழ்த்துட்பட நானூற்றொரு செய்யுட்கள் உள்ளன. இதனைப் பாடிய புலவர் பெரு மக்கள் நூற்றெழுபத்தைவராவர். அவர்களைப் போற்றிய வேந்தர் மன்னர் புரவலரும் ஏறத்தாழ அத்தொகையினரை நெருங்குவர். இதன்கண் பண்டுள்ள தமிழக எல்லை, மொழிவளம், நாட்டுவளம், கொடைவளம், செங்கோன் முறைமை, போர்த்திறன், நாகரிக மாண்பு, நன்னெறி வாழ்க்கை, கடவுட் கொள்கை, மற மானம் முதலிய பலவும் அகச்சான்றுடனும், அமைந்த உவமையுடனும் பொருள் நயம் கெழுமக்காணலாம்.

சுருங்கச்சொல்லின் இதனைக் கற்பார் தமிழக வரலாறு சிறப்புறக்கற்ற சீர்மையராவர். இதற்கு, ஆசிரியர் பின்னத்தூர் திரு. அ. நாராயணசாமி ஐயரவர்கள் பல்லாற் றானும் செவ்விய நல்லுரை யொன்று இயற்றி 1914 இறுதி யில் வெளிப்படுத்தியுள்ளார்கள். உரை, உள்ளுறை இறைச்சி மேற்கோள் முதலிய விளக்கமும், ஆங்காங்கே இலக்கணக் குறிப்புக்களும், துறைச்சிறப்புக்களும் காட்டி எளிய இனிய தூய நடையில் செல்கின்றது. பண்டை உரையாசிரியர் நடையே பயின்றது.

அவ்வுரையினைப் பின்னுங்கிடைத்த திருத்தப் பாடங் களுடன் செப்பம்செய்து, கடினமும் மயக்கமுமாகிய சந்தி களைப் பிரித்து, ஆயிரத்தைஞ்ஞூறுக்கு மேற்பட்ட அருஞ் சொற்பொருள் விளக்கத்துடன் நல்ல முறையில் நம் கழகப் பதிப்பாக வெளிவந்துளது.

அழகிய இருவண்ண மேலட்டையுடன் கூடிய

கலிக்காக்கட்டு விலை ரூ. 8 0 0

அப்பர் அச்சகம், 2/140, பிராட்வே, சென்னை-1.